திருவள்ளுவர் ஆண்டு 2045

ஏப்ரல் - 2015

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

தொகுதி : 59
பகுதி : 06

விலை ரூ.10/-



மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

# மதுரைத் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| மாட்சிமை தங்கிய மன்னர் நா.குமரன்சேதுபதி M.B.A., | தலைவர் |
| மருத்துவர் ந.சேதுராமன் M.S., M.Ch. (Uro), MNAMS. (Uro), FICS | துணைத் தலைவர் |
| திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | செயலாளர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | உறுப்பினர் |
| திரு. மருத்துவர் மு.அம்மமுத்துப்பிள்ளை | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி B.E., | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. கே.ஆர்.என். கருணாகரன் M.B.A., M.L., | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. பெ.சந்திரசேகரன் | உறுப்பினர் |

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 59

பகுதி : 06

ஏப்ரல் : 2015

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2045



வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

21.03.1867 - 02.12.1911

| இதழ்க்கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள்கட்டணம் | ரூ. 1,000 | ரூ. 6,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5,000 | ரூ. 10,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 10 | |

செயலாளர்

**ச.மாரியப்ப முரளி,** எம்.ஏ.,பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

பதிப்பாசிரியர்

பேராசிரியர். **இரா.சதாசிவம்**

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

# பொருளடக்கம்


**1. சுவாமி விபுலானந்தரின் ஆய்வும் திறனும் நவீன நோக்கும்** **4**
முனைவர் **அருணாசலம் சண்முகதாஸ்**

**2. உரிப்பொருள் அடிப்படையில் திருக்குறள் காமத்துப்பாலும் சங்க இலக்கியமும்** **20**
முனைவர் **க.இரா.இராஜேஸ்வரி**
(முனைவர் பட்ட ஆய்வாளர்)

**3. பாடுபொருள் பரவும் வகை (சென்ற இதழ்த் தொடர்ச்சி)** **25**
முனைவர் **கதிர்.மகாதேவன்**

**4. தேவார இலக்கியத்தின் தோற்றமும் சமூகப் பின்புலமும்** **30**
முனைவர் **உ.கருப்பத்தேவன்**

# இதழ் மணம்

"சுவாமி விபுலானந்தரின் ஆய்வும் திறனும் நவீன நோக்கும்" என்னும் தலைப்பில் யாழ்ப்பாணம் பேராசிரியர் அருணாசலம் சண்முக தாஸ் அவர்களுடைய கட்டுரை வெளிவருகிறது. இப்பெரியார் விபுலானந்தரின் அறநெறி சார்ந்த கல்விப் பணியைத் திறம்பட எடுத்துரைத்துள்ளார். ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய தலைப்புகளை அடிகளார் விமர்சனம் செய்திருப்பது தொடங்கிப் பல்கலைக் கழகங்கள் நாட்டு மக்களை உயர்நிலைக்கு அழைத்துச் செல்லும் உயர்ந்த கல்வி நிறுவனம் என்பதை கருத்தில் கொள்ளாமல் மக்கள் மொழியைப் புறக்கணித்து அந்நிய மொழியில் செயல்படுவது மக்கள் பணத்தில் செயல்படும் பல்கலைக் கழகங்கள் என்பதை மறந்த குற்றமாகாதா? என்று சென்ற நூற்றாண்டில் எழுப்பிய கேள்விக்கு இன்றுவரை விடை காணாமல் மக்கள் அறியாமையாகிய இருளில் தவிப்பதற்கு உயர் கல்வி நிறுவனங் களின் மொழிக் கொள்கை முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதை கற்றோர் உணர்தல் வேண்டும். பல்கலைக்கழகங்களின் முயற்சியால் மேலை நாடுகளில் அரசியல் பொருளாதார சமூக மாற்றங்கள் அந்த மக்கள் வாழ்க்கையை மேம்படுத்தி மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கியுள்ளன. ஆனால் இந்திய மக்களுக்கு உணவு, உடை, குடியிருப்பு, வேலைவாய்ப்பு ஆகிய துறைகளில் பாதுகாப்பு இன்மையால் மக்கள்படும் துன்பம் சொல்லிமுடியாது. இதனைக் கல்வியாளர்கள் சிந்திக்க வேண்டும்.

முனைவர்பட்ட ஆய்வாளர் இராசேசுவரி எழுதிய "உரிப்பொருள் அடிப்படையில் திருக்குறள் காமத்துப் பாலும், சங்க இலக்கியமும்" கட்டுரை இடம்பெறுகிறது. ஆய்வாளர் சங்க காலத்தில் தோன்றிய அக இலக்கிய மரபு திருக்குறள் காமத்துப்பாலுள் பின்பற்றப்படவில்லை என்பதை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு திறம்பட விளக்கியுள்ளார்கள். பரத்தையர் பிரிவு ஒழுக்கக்கேடு என்று தமிழ்ச் சமூகத்திற்கு அறிவுறுத்தும் பேரறிவாளர் திருவள்ளுவர் என்பதையும், பெண்வழிச்சேரல், வரைவின் மகளிர், சூது, மது உண்டுகளித்தல், பேருண்டி விரும்புதல் ஐந்தும் குற்றம் என வள்ளுவர் அறிவுறுத்தியிருப்பதை மனத்தில் கொள்ளுதல் அறிவுடைமையாகும்.

"தேவார இலக்கியத்தின் தோற்றமும் சமூகப் பின்புலமும்" என்ற தலைப்பில் முனைவர் உ.கருப்பத்தேவன் கட்டுரை இடம்பெறுகிறது. தேவார இலக்கியம் தோன்றிய காலத்தில் இருந்த அரசியல், சமூக சமயப் பின்புலத்தை முறையாகவும் மிக்க சிரத்தையோடும் ஆய்ந்து வெளிப் படுத்தியுள்ளார். பக்தி இலக்கியம் பயிலும் மாணவர்களுக்கு இக்கட்டுரை அதன் பின்புலத்தை தெளிவுறுத்தி பக்தி இலக்கிய வரலாற்றுக்குத் தோற்றுவாய் செய்கிறது.

# சுவாமி விபுலானந்தரின் ஆய்வும் திறனும் நவீன நோக்கும்

முனைவர் **அருணாசலம் சண்முகதாஸ்,**
யாழ்ப்பாணம்.

**முன்னுரை**

மதுரைத் தமிழ்ச்சங்கத்துடனும் செந்தமிழ் இதழுடனும் நெருங்கிய தொடர்புடையவராய் இருந்தவர் தவத்திரு முத்தமிழ் வித்தகர் பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர் அவர்கள். நூற்றாண்டுக்கு மேலாக, நிறைந்த தமிழ்ப்பணியினை ஆற்றிய மதுரைத் தமிழ்ச் சங்கத்தினையும் செந்தமிழ் இதழையும் விழாவெடுத்துச் சிறப்புச் செய்யும் வேளையில் வெளியிடவுள்ள தமிழ்ச்சங்கம் - செந்தமிழ் ஒரு நூற்றாண்டுப் பணிகள் என்னும் மலருக்கு சுவாமி விபுலாநந்தர் பற்றி எழுதுவது பொருத்தமென எண்ணினேன். சுவாமி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றியவர். தமிழ்நாட்டில் மயிலாப்பூரில் இருந்த காலத்திலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இருந்த காலத்திலும் பெருந்தொகையான ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இக்கட்டுரைகளை ஆராயின் அடிகளாருடைய ஆய்வுத் திறன்களையும் அவரது நவீன நோக்கினையும் நன்கு இனங்காணக்கூடியதாயுள்ளது. அவற்றை ஆராய்வதாக இக் கட்டுரை அமைகின்றது.

**ஆராய்ச்சி எவ்வாறு மேற்கொள்ளப் படவேண்டும்.**

மரபுவழி விடயங்களை ஆய்வு செய்வதா அல்லது நவீன விடயங்களை ஆய்வு செய்வதா என்பது பற்றி ஆய்வாளர்கள் எண்ணுவதுண்டு. உயர்கல்வியை முடித்துக்கொண்டு ஆய்விலே ஈடுபட வேண்டுமெனச் சிலர் எண்ணக்கூடும். ஆனால், விபுலானந்த அடிகளாரோ உயர் கல்வியில் ஆராய்ச்சியின் இன்றியமையாமையினை வற்புறுத்தியுள்ளார். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்துக்குரிய கலைத்திட்டத்தினைச் சுவாமி அமைத்தபொழுது இலக்கணம், சங்கநூல், காப்பியம், இதிகாசம், புராணம்,

பிரபந்தம், சைவசித்தாந்தம், வைணவச்சித்தாந்தம், நியாய வேதாந்தம், நூல்களிற்புலமை என்னும் பத்துத்துறைகளை அமைத்து உயர்கல்வி மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் நாளடைவில் கணிதம், சோதிடம், வைத்தியம், பௌதீகம், சித்திரம், சிற்பம், இசை, நாடகம் முதலிய துறைகளையும் சேர்த்துக்கொள்ளலாம் என்றும் கூறியுள்ளார். இவற்றுக்கு மேலாக ஒவ்வொரு துறையிலும் பயிலும் மாணவர்கள் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுவது இன்றியமை யாதுள்ளது. இதுபற்றி செ.அழகரத்தினம் கூறுவது பொருத்த மாயமைவதை நோக்கலாம்.

"ஒவ்வொரு துறைக்கும் அடிகள், "ஆராய்ச்சிக் கட்டுரை" எனும் பகுதியையும் கட்டாயப் பகுதியாக அடக்கியுள்ளது கவனிக்கப்படவேண்டியது. இவை உயர் கல்வியில் ஆராய்ச்சியின் அவசியத்தை வற்புறுத்துவதாக அமைந்துள்ளதைத் தெளிவாகக் காட்டுகின்றன. உண்மையில் இப்பாடத்திட்டத்தினை நுணுகி ஆராய்ந்தால், விபுலாநந்த அடிகள் நுண்மாண் நுழைபுலம் பட்டெனத் தெரியும். அடிகள் கருதிய முறையில் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் அதனைச் செயற்படுத்தியதாகத் தெரியவில்லை. அவ்வாறு செய்திருப்பின் அது இன்று இந்துக் களின் கலாசாரப் பல்கலைக்கழகமாகப் பரிணமித்திருக்கும் வாய்ப்பினைப் பெற்றிருக்கலாம்."1

**ஆய்வுக்குரியனவற்றை இனங்காணல்**

இன்று ஆய்வுக்குரிய விடயங்களை இனங்காணலும், ஆய்வினை மேற்கொள்வதும் இலகுவாக வந்துவிட்டன. ஆனால் சென்றநூற்றாண்டின் தொடக்ககாலப் பகுதிகளிலே எவ்வெவ் விடங்களை ஆராய வேண்டுமென எண்ணுவதே ஓர் ஆய்வாக அமைந்துவிடும். ஆய்வுத்திறனும் ஆய்வு நுணுக்கு நோக்கும் உடையவர்களாலேயே அது முடியும். சுவாமி அத்தகைய ஆய்வுத் திறனுடையவராக இருந்துள்ளார். அவர் இனங்கண்ட ஆய்வுப்புலம் பற்றி அவருடைய கூற்றுகளாலேயே எடுத்துக்காட்டுகிறோம். "நமது முன்னோர்கள் எழுதிவைத்த ஞான நூல்களும் பிறவும் இன்னும் ஐரோப்பிய பண்டிதரால் ஆராய்ந்தளவிடப்படாத நிலையினவாக விளங்குகின்றன" எனக்கூறும் சுவாமி "அத்தகைய நூல்களை முதற்கண் நாம் ஆராய்ந்துள்ளோமா?" என்று வினவுகிறார்.

"இதுவரையில் மேற்றிசையோர் மெய்கண்டானை மதியாமல் இருப்பது ஏனென்றால் மெய்கண்டான் உதித்த தமிழ் நாட்டிற்குரிய நாம் மெண்கண்டானுடைய அரிய நூலை முறைப்படி ஆராயாமை யினாலென்போம். மெய்கண்டானுடைய சிறப்பியல்பு, பிறநாட்டு ஆசிரியருக்கும் மெய்கண்டானுக்குமுள்ள ஒற்றுமை, விகற்பம், மெய்கண்டான் உதித்தற்கு முன் தமிழ்நாட்டுச் சமயநிலை, ஆரியரது காலம், முதல்நூல், வழிநூல், பிற்பட்ட ஆராய்ச்சியினால் மெய்கண்டானது நூலிற் காணப்படும் வழுக்கள், வழுவமைதிகள் என்றின்னோரன்னவற்றை எல்லாம் பிறநூலுதவி, பிறமொழி நூலுதவி கொண்டு ஆராயின் அவ்வாராய்ச்சி உலகிற்குப் பயன்படுவதாகும். உலகு அதனைப் பயன்படுத்திக் கொள்ளும்"2

யாழ்ப்பாணம் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்தவரும் திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநருமாகிய வண.பிதா கலாநிதி மரியசேவியர் அடிகளார் சைவசித்தாந்தத்தை ஆராய்ந்து முனைவர் பட்ட ஆய்வேட்டினை ஜெர்மன் மொழியிலே எழுதியுள்ளார். இவர் போன்றோருடைய ஆய்வுகளுக்கு எதிர்வுகூறுவதாகச் சுவாமி யினுடைய மேற்கோள் அமைகின்றது.

**சான்று காட்டல்**

ஆய்வுக்குச் சான்று காட்டவது இன்றியமையாததாகும். சுவாமியே தம்முடைய ஆய்வுக் கட்டுரைகளிலே சான்று காட்டி எழுதியுள்ளமையினைக் காணலாம். அவர் தம்முடைய இலக்கியக் கட்டுரைகளிலும் வரலாற்றுக் கட்டுரைகளிலும் எடுத்துக்கொண்ட பொருளின் பொதுத் தன்மைகளையும் தனித் தன்மைகளையும் காட்டும் ஆய்வு மனப்பாங்கினைக் காணும் அதே வேளையில் பெருந் தொகையான இலக்கிய வரலாற்றுச் சான்றுகளைக் காட்டியமை நவீன ஆராய்ச்சியாளருக்கு வழிகாட்டியாக அமைகின்றது. எடுத்துக் காட்டாக, சுவாமியினுடைய "இலக்கியச்சுவை" என்னும் கட்டுரையைக் குறிப்பிடலாம். அதில்,

"பாரதத்திற்குக் காப்பியத் தலைவன் யாவன்? கண்ண பிரான் என்பாரும், அருச்சுனன் என்பாரும், உதிட்டிரன் என்பாரும், சுயோதனன் என்பாருந்தம்முள்ளே முரணி நிற்க, ஈண்டுக் குறிப்பிட்ட அனைவரையுந் தன் அன்பினாற் பிணித்த அங்கர்கோனாகிய கன்னன் காப்பியத் தலைவனாவானென்பராது

கூற்று வலிமையுற்று நிற்கின்றது."4 என்று கூறுமிடத்து அடிகளாருடைய ஆய்வுத்திறனையும் நுணுகிய நோக்கினையும் காணக்கூடிய தாயுள்ளது. ஏன கன்னனைக் காப்பியத் தலைவனாகக் கொள்ளவேண்டுமென்பதற்கு மூன்று சான்றுகள் மேற்குறிப்பிட்ட கட்டுரையிலே காட்டுகின்றார். முதலாவது, திரெளபதி ஐவரைப் பற்றி அறிவதற்கு முன்னர் கன்னனைப் பற்றித்தான் அறிகிறாள். அவளுடைய செவிலித்தாயர்,

"பெண்மைக்கு இரதியென வந்த பெண்ணா
ரமுதே பேருலகில்
உண்மைக்கிவனே வலிக்கிவனே உறவுக்கிவனே
உரைக்கிவனே
திண்மைக்கிவனே நெறிக்கிவனே தேசுக்கிவனே
சிலைக்கிவனே
வண்மைக்கிவனே கன்னனெனும் மன்னன் கண்டாய்
மற்றிவனே"

ஒரு தலைமகனுக்குரிய அத்தனையுமுடையவனைக் கண்ட திரெளபதி தன் மனத்துள்ளே அவனை வரித்துக்கெண்டாள். இரண்டாவது, அருச்சுனனது ஆயிரம் அம்புகள் துளைத்த துளை களினின்றும் குருதி பாய்கின்றபோதும் கண்ணன் வேதியன் வடிவிலே வந்து புண்ணியமனைத்தையும் தருக என்று கேட்ட பொழுது கொடுத்தமை. மூன்றாவது, தாயாகிய குந்திதேவி போர்க் களத்தினை அடைந்து, இறந்துபடுகின்ற கன்னனை மார்புறத் தழுவி, அவன்தான் தன் தலைமகன் என்பதை,

"ஓரைஞ்சு பேருளரால் அறந்தவ றாத உதிரட்டிரனா தியர்
உரகக் கொடியோனாதி
ஈரைஞ்சு பதின்மருளர் தம்பிமார்கள் இங்கிதங்கள்
அறிந்தடைவே ஏவல் செய்யப்
பாரஞ்சு மொருகுடைக்கீழ் நீயே யாளும் பதமடைந்தும்
விதிவலியாற் பயன்பெறாமல்
காரஞ்சு கரதலத்தா யந்தோ வந்தோ கடவுளர்தம்
மாயையினாற் கழிவுற்றாயே"

என்று அரற்றுவதினூடாக அறியக்கூடியதாயுள்ளதென அவர் கூறுகின்றார். மேலும் "இத்தகையதோர் காட்சியினை ஹோமர் எழுதிய வீரகாவியங்களிலும் காண்டலாகாது" என்றும் கூறியுள்ளார். சுவாமியினுடைய ஆய்வுத்திறன் எவ்வாறமைந்துள்ளது என்பது அவருடைய சான்று காட்டி நிறுவும் பண்பிலிருந்து கண்டுகொள்ளக் கூடியதாயுள்ளது.

**ஆய்வு அறம்**

ஆய்வு செய்பவர்கள் சில் அறங்களைக் கண்டிப்பாகப் பின்பற்றியேயாகவேண்டும். எல்லாவற்றையும் இங்கு விரிவஞ்சிக் குறிப்பிடவில்லை. சுவாமி எங்களுக்குக் காட்டித்தந்த ஒரேயொரு ஆய்வு அறத்தினை மட்டும் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். வ.சிவசுப்பிரமணியம் (1993: 128-129) இதனை விரிவாக எடுத்துக் காட்டியுள்ளார். தமது கருத்துக்களை மறுத்துக் கூறவேண்டிய இன்றியமையாத தேவை ஏற்படின் அவற்றை நாகரிகமான முறையிலே மறுத்துரைப்பார்" எனக்கூறும் சிவசுப்பிரமணியம் சுவாமியினுடைய "அறத்துப்பாலாராய்ச்சி"க் கட்டுரையை எடுத்துக் காட்டாகக் காட்டியுள்ளார். மேலும், எஸ்.வையாபுரிப்பிள்ளை 1922இல் செந்தமிழ் ஆய்விதழிலே எழுதிய தொடர் கட்டுரைகளிலே தமிழ்மொழி பற்றிக்கூறிய கருத்துக்களை மறுத்து "வடமொழிக்குத் தமிழ்மொழி செவிலித் தாயாகுமா?" என்ற தலைப்பில் ஈழத்தவர் ஒருவர் கண்டனக் கட்டுரையொன்றினைச் செந்தமிழிலே எழுதினார். இதேவேளை சுவாமி (அப்பொழுது பண்டிதர் மயில்வாகனனாக இருந்தவர்) "விஞ்ஞான தீபம்" என்னும் தொடர் கட்டுரையின் முதல் கட்டுரையினைச் செந்தமிழ் சஞ்சிகைக்கு அனுப்பியிருந்தார். அக்கட்டுரையினால் ஏற்படக்கூடிய ஐயப்பாடுகளை அகற்றுவதற்காகச் செந்தமிழ் ஆசிரியருக்குப் பின்வரும் கடிதத்தினை அவசரமாக எழுதி அனுப்பினார்.

ஐயா, இதன்பின் சேர்த்திருக்கும் 'விஞ்ஞானதீப' நூன்முகத்தில் எழுதியிருக்கிற பொருண்முடிபுகளுள் ஒரு சில ஆவணி மாதம் 'செந்தமிழ்'ல்' தமிழ் மொழிக்கு வடமொழி செவிலித்தாயாகுமா? என்னும் வியாசத்திலுங் காணப்படுதலாலும் இனிப்பொருட்பாகுபாட்டினைப் பற்றி யானுரைத்த முடிபுகள் சில அவ்வியாசத்தை எழுதியவர் கொண்ட முடிபுகளோடு முரணுற்று

நிற்பதனாலும் எனது உரை குறித்த வியாசத்திற்கு உடம்படல் கருதியோ மாறுகொளல் கருதியோ எழுந்ததென்று எண்ணுதற் கிடமுண்டு. ஆவணி மாதம் செந்தமிழ் வெளியாவதற்கு முன்னமே எனது வியாசம் தங்களுக்கு அனுப்பப்பட்டதென்னும் உண்மை வெளிவரின் அவ்வித ஐயப்பாடு நிகழாது. ஆதலினால் அவ் வுண்மையையுரைக்கும் இக்குறிப்பினை எனது வியாச முடிவில் வெளியிடும்படி வேண்டிக் கொள்ளுகின்றேன்.

இராமகிருஷ்ணமடம், பண்டித மயில் வாகனன்
திருமயிலை.

செந்தமிழ் ஆசிரியரும் ஆய்வறம் பேணும் வகையில் கட்டுரைக்கு முன்னர் பண்டித மயில்வாகனனாரின் கடிதத்தைப் பிரசுரித்தார்.

**ஆய்வுமொழியைத் தேர்ந்தெடுத்தல்**

ஆய்வு செய்பவர் தம் ஆய்வுமுடிபுகளை அறிவியலடிப் படையிலே வெளிப்படுத்துதற்குரிய மொழியினைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆய்வுக்கும் நவீன அறிவியல் துறைகளை வளர்ப் பதற்கும் ஆங்கில அறிவின் இன்றியமையாமையினை நன்கு உணர்ந்து கொண்ட அடிகளார் தாய்மொழியே ஆய்வுக்குச் சிறந்த மொழியெனக் கருதுவதாக அவருடைய பல ஆக்கங்களிலிருந்து பெறக்கூடியதாயுள்ளது. சென்னைச் சர்வகலாசாலையிலே தமிழ் கட்டாயமாகக் கற்பிக்க வேண்டும் என்பதைப் பலரும் சுட்டிக் காட்டினர். சென்னைச் சர்வகலாசாலை எதற்கும் செவிசாய்க்க வில்லை. அப்பொழுது அடிகளார் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் (1923) சஞ்சிகையிலே,

“சென்னைச் சருவகலாசாலை சுதேச பாஷைகளைப் புறக்கணித்து வருகிறதென்பது மறுக்கொணா உண்மையே, சருவகலாசாலை ஏற்பட்டிருப்பது எதற்கோ? ஏழைச் சனங்களிட மிருந்து பெறுகிற வரிப்பணத்திலிருந்து கோடிக்கணக்கான ரூபாக்களைச் சருவகலாசாலைக்குக் கொடுத்துவருவது என்ன காரணத்திற்காகவோ? சருவகலாசாலையர் அளிக்கிற பட்டங்கள் தம்மொழி மறந்து பிறமொழியிற் பிதற்றுகிற பேதை மக்களைக் குறியீடு செய்வதற்குரிய அடிமை முத்திரையாமோ? அன்றேல், அவை அறிவு நிறைமாந்தருக்குக் கவ்விக் கழகத்தினர்

கொடுத்துதவும் அறிவு முத்திரையாமோ? என்ற இன்னோரன்ன துறைகளை ஆராய்ந்து நோக்குவது தேசாபிமானமுடைய பெரியார்மேற் பொறுத்த கடனாகும். தனக்குரிய சிறப்பியல்பு எது? உலகிலுள்ள கல்விக் களஞ்சியத்திற்குத் தான் கொடுத்துதவக் கூடிய பெரும்பொருள் யாது? என்று இன்னோரன்ன துறைகளை ஆராய்ந்து நோக்குவது சென்னைச் சருவகலாசாலைமேற் பொறுத்த கடனாகும்.

என்று அறந்தழுவிய சினத்துடன் சுவாமி எழுதலானார். தமிழ் மொழியை உயர் கல்விக்கும் ஆய்வுக்கும் பயன்படுத்தும்போது எத்தகைய தமிழ் வழக்கினைப் பயன்படுத்தும்போது எத்தகைய தமிழ் வழக்கினைப் பயன்படுத்த வேண்டும் என்பது தொடர்பாகவும் சுவாமி எண்ணியுள்ளார்." "சோழ மண்டலத்துத் தமிழும் ஈழமண்டலத்துத் தமிழும்" என்னும் கட்டுரையில்,

"நாடக நூலுக்குக் கொடுந்தமிழ் வழக்கு வருமென்பது ஒருபாலாக அறநூல் (Ethics and Law) பொருணூல் (Natural and Social Sciences), இன்ப நூல் (Fine Arts), வீட்டு நூல் (Religion and Philosophy) என அறிஞர் வகுத்துரைத்த நூல்களைச் செந்தமிழில் எழுதுவது முறையா? கொடுந்தமிழில் எழுதுவது முறையா? என்னும் வினா எழுகிறது. ஆராய்ந்து கற்கும் அறிவுடையோருக்கு உரியவாத லாலும் இடவேறுபாடு பால்வேறுபாடு, வருண வேறுபாடு என்னும் வேறுபாடுகளை இகந்து நிற்பவாதலாலும் அறிவு நூல்கள் செந்தமிழ் மொழியிலே ஆக்கப்பட வேண்டுமென்பது முடிவாகின்றது."6

***ஆய்வுப் புலங்கள்***

சுவாமியினுடைய ஆய்வுத்திறனை அவர் தெரிவுசெய்து ஆய்வு மேற்கொண்ட ஆய்வுப்புலங்களூடாக அறியக் கூடியதாயுள்ளது. பழைமையினை ஆராய்ந்து புதியவர்களுக்குக் கொடுக்கவேண்டும். பிற நாகரிகங்களை ஆராய்ந்து அவற்றை அறியாத எம்மவர்க்குக் கொடுக்கவேண்டும். எம்மிடம் உள்ள வற்றைப் பிறரும் அறியும்படி கொடுக்கவேண்டும் என்னும் நோக்குகளை அடிப்படையாகக் கொண்டே சுவாமியினுடைய ஆய்வுகள் நடைபெற்றன. எம்மடைய பண்பாட்டின் மீட்டுரு வாக்கத்திலே சுவாமி ஈடுபட்டிருந்தார். குறிப்பாகப் பண்டைத் தமிழரிடம் இருந்த இசைக்கருவியாகிய யாழினை மீட்டுருவாக்கஞ்

செய்யும் ஆய்வு சுவாமிக்கு அழியாப்புகழினைத் தந்து நிற்கின்றது. ஒரு விஞ்ஞானி தன்னுடைய ஆய்வுக் கூடத்திலே இரவுபகலாகப் பரிசோதனைகள் செய்வதுபோல அறிவுப் புலவராகிய பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர் யாழ் பற்றிய ஆய்வினை மேற்கொண்டார். தமிழ், இசை, ஒலியியல், கணிதவியல், வரலாறு ஆகிய துறைகளை உள்ளடக்கியதாக யாழ் பற்றிய ஆய்வு அமைந்தது.7

ஓர் ஆய்வு எவ்வாறு நிகழ்த்தப்பட வேண்டும் என்பதற்குச் சுவாமிகளுடைய யாழ் நூல் ஆராய்ச்சி ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும். ஏதாவது பட்டத்தினையோ சான்றிதழையோ எதிர்பார்த்து சுவாமி இந்த ஆய்வினை மேற்கொள்ளவில்லை. ஆய்வுப்பயன் உலகளாவியதாக இருப்பதை நன்குணர்ந்தே அடிகளார் இந்த ஆய்விலே ஈடுபட்டார். யாழ் நூலை 1947 ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 5ஆம் 6ஆம் நாள்களிலே திருக் கொள்ளம்பூதூர்த் திருக்கோயிலிலே ஆளுடைய பிள்ளையார் திருமுன்னர் அரங்கேற்றுவது பற்றித் தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் தம்முடைய அறிவிப்பில் பின்வருமாறு குறிப்பிட்டனர்.

“அருண்மிகு விபுலாநந்த அடிகளார், பதினான்கு ஆண்டு களாக இடைவிடாது நிகழ்த்திய இசை ஆராய்ச்சியினால் நுண்ணி திற் கண்டுணர்ந்த பழந்தமிழின் நூன்முடிபுகளை ஒரு கோவைப் படுத்தி, ஆயிரம் ஆண்டுகளாக மறைந்து போன தமிழர் இசைக் கருவியாகிய யாழின் இயல்பினை நன்குணர்ந்து உருவாக்கிச் செயல்படுத்தும் வண்ணம், பண்டைத்தமிழர் இசைத்திறன் விளக்கும் இசைத்தமிழ் நூலாகிய யாழ் நூலினைத் தமிழகத்திற்கு இயற்றி உதவியுள்ளார்.”8

இப்பேராய்வு நூலினை ஆசிரியர் தமிழகத்துக்குத் தந்துள்ளார் என்று கூறுமிடத்து அவருடைய ஆய்வின் பயன் எவ்வளவு பரந்தது உயர்ந்தது என்பதை நாம் உணரக் கூடியதாயுள்ளது. ஆய்வுநெறி பற்றிக் கூறுபவர்கள் ஆய்வு ஏணியின் கடைசிப்படியாக ஆய்வுப் பயனைக் குறிப்பிடுவர். ஓர் ஆய்வினை மேற்கொள்ளும் போது அதன் பயனை நன்கு உணர்ந்தே மேற்கொள்ள வேண்டும். பயனில்லாத ஆய்வு விழலுக் கிறைத்த நீராகும். பதினான்கு ஆண்டுகள் சுவாமிகள் உழைத்த உழைப்பு இந்த உலகிலே சந்திரனும் சூரியனும் இருக்கும்

வரையும் நின்று நிலவும் பெற்றியது.

சுவாமி விபுலாநந்தருடைய ஆய்வுத் திறன்களிலே குறிப்பிடக்கூடியது. அவருடைய ஒப்பியல் ஆய்வாகும். அடிகளாருடைய ஒப்பியலாய்வு முயற்சி அவர் பிறமொழி இலக்கியங்களிற் கொண்ட சிறப்பான ஈடுபாட்டின் விளைவேயாகும். வடமொழி, ஆங்கிலமொழிகளாலான இலக்கியங்களிலுள்ள சிறப்புக்களை நன்கு உணர்ந்த அடிகளார் அவற்றைத் தமிழ் மக்களும் அறிந்து சுவைக்க வேண்டுமென மொழிபெயர்ப்புகள் செய்துவந்தார். இவ்வாறு பிறமொழி இலக்கியங்கள், வரலாறு என்பவற்றில் ஈடுபடும்போது அவற்றை எம்முடைய மொழி, வரலாறு என்பவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்க முயலுதல் இயல்பான செயற்பாடேயாகும். "யவனபுரத்துக் கலைச்செல்வம்" என்னும் கட்டுரையிலே அடிகளார் கிரேக்க மொழி இலக்கியங்களிலே காணப்படும் சில பண்புகளை வடமொழியுடனும் தமிழ் மொழி யுடனும் ஒப்பு நோக்குகிறார். எஸ்.வையாபுரிப்பிள்ளை, க.கைலாசபதி, கா.சிவத்தம்பி ஆகியோர் கிரேக்க இலக்கியங் களைத் தமிழ் இலக்கியங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு முன்னரே சுவாமி விபுலாநந்தர் அத்தகைய ஒப்பியலாய்வினை மேற்கொண்டிருந்தமை அவருடைய ஆய்வுத்திறனின் இன்னொரு பரிமாணமாகும். சுவாமி இலக்கிய ஒப்பாய்வுடன் மாத்திரம் நிற்காது கிரேக்க - தமிழ் மொழி வரிவடிவ ஒப்பாய்வினையும் மேற்கொண் டிருந்தார். "யவனபுரத்துக் கலைச்செல்வம்" கட்டுரையிலே இருமொழிகளினுடைய ஒலி வரிவடிவ ஒற்றுமைகள் பலவற்றை எடுத்துக்காட்டி, "அங்ஙனமாதலின், யவனபுர நெடுங்கணக்கு, தமிழ் நெடுங்கணக்கோடு பூரண ஒற்றுமையுடையதென்பது நிறுவப் படுகின்றது. இவ்விரு மொழியின் வரிவடிவங்கள் ஒன்றினின் றொன்றெழுந்தனவாமோ, அன்றேல் இவற்றின் வேறாகிய மற்றொரு மொழியின் வரிவடிவத்தினின்று எழுந்தனவாமோ என்பதனை மேலாராய்வாம்" என்று குறிப்பிடுகிறார். ஈழத்திலே ஒப்பியலாய்வுக்கு அடிகளாரே முன்னோடியாக விளங்கினார். ஒப்பியல் ஆய்வுக்குப் பயன்படக்கூடிய தரவுகளை மொழிபெயர்ப்பு களுடாகவும் கட்டுரைகளுடாகவும் வழங்கினார்.

அடிகளாருடைய ஆய்வுப் புலங்களிலே இன்னொன்று மொழியாய்வாகும். ஹென்றி ஸ்வீட் (Henry Sweet) போன்றோருடைய ஒப்பியலாய்வு, நவீன மொழியியலின் தந்தை பேர்டினன் டி சொசியோ (Ferdinand de Saussayre) வின் மொழி பற்றிய கருத்துக்கள் பரவி வரும் வேளையிலே சுவாமி அவற்றுட் சிலவற்றைத் தமிழ்மொழியுடன் இணைத்து நோக்கியுள்ளார்.

**ஆய்வு நுணுக்கம்**

சுவாமியினுடைய ஆய்வுகளுக்கு மணி முடியாக அமைவது யாழ் நூல் ஆய்வேயாகும். யாழ்நூல் ஆய்வு இரண்டு வகையான ஆய்வு நுணுக்கங்களையுடையது.

1. பண்டைய பண்பாட்டுக் கருவியை மீட்டுருவாக்கம் செய்தல்.
2. தேவாரங்களைப் பகுப்பாய்வு செய்தலும் மீள்பார்வை செய்தலும்.

இவ்விரண்டனுள் முதலாவது விடயம் முன்னர் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இரண்டாவது விடயம் பற்றிச் சில சொல்வோம். தேவாரவியலிலே தேவாரங்களுடைய பண்கள் பற்றி விரிவாக நோக்குகின்றார். அப்பண்களுடைய நுணுக்கமான பண்புகள் பற்றியும் வேறுபாடுகள் பற்றியும் விளக்கமாகக் கூறிச் செல்கிறார். இப்பண்கள் சிலவற்றின் மெட்டுக்களிலே நாட்டார் பாடலிசை சேர்ந்துள்ளது தொடர்பாகவும் இடையிடையே குறித்துச் செல் கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் நாட்டுப்பாடல் மெட்டுக்களைத் தமது தேவாரப் பாசுரங்களுக்குப் பயன்படுத்தியுள்ள செய்தியினைச் சுவாமி விபுலானந்தர் தம்முடைய யாழ் நூலிலே குறிப்பிட்டுள்ளார். காலத்தாற் பிந்திய சுந்தரரருளிய தேவாரங்கள் நாட்டுப் பாடல்கள் பலவற்றையெடுத்தாண்ட சிறப்பினை யுடையன என்று சுவாமி கூறுவர். இந்தளப் பண்ணில் அமைந்த திருப்பதிகம் மகளிரது கும்மிப்பாடலுக்கு இயைந்த சந்தமாக அமைவதை அவர் குறிப்பிட்டுள்ளார். சுந்தரரின் 10ஆம் பதிகம் 3ஆம் பாடலை ஆராய்ந்ததால் அது இயற்றமிழ் யாப்பிலக்கணத்தின்படி எழுசீர் ஆசிரிய விருத்தமாயமைகின்றது. ஆனால் அப்பாடலின் சந்தத் தினை நோக்கும்போது அது வேறு வகையிலே அமைகின்றது. அப்பாடலுக்கு,

தானதனாதன - தானதனா - தன - தானதானதன - தானதனா எனக் கட்டளையடி கொண்டு,

கொடிகளிடைக்குயில் கூவுமிடம் – மயில் ஆலுமிடம்மழு
– வாளுடைய
கடிகொள்புனற்சடை கொண்டநுதற் – கறைக்
கண்டனிடம் பிறைத் – துண்டமுடிச்
செடி கொள்வினைப்பகை – தீருமிடந் – திரு – வாகு
மிடந்திரு மார்பகலத்
தடிகளிடம் மழல் வண்ணனிடங் – கலிக் – கச்சிய
நேகதங் – காவதமே

எனக் கும்மிச் சந்தத்துக்கேற்பப் பிரித்துக் காட்டுகிறார் சுவாமி விபுலானந்தர். கி.பி.14ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்த் தமிழில் மக்கள் நாட்டமுடைய பல இலக்கியங்கள் தோன்றின. குறவஞ்சி, பள்ளு, கும்மி, சித்தர் பாடல்கள் என்பன அத்தகைய இலக்கியங் களாகும். இவற்றுள், கும்மி பெருவாரியாகக் கையாளப்பட்டதால், இருபதாம் நூற்றாண்டில் யாப்பதிகாரம் என்னும் பா வடிவ நூலை எழுதிய புலவர் குழந்தை அதனை ஒரு யாப்பு வடிவமாகக் கொண்டு அதற்கு இலக்கணம் வகுக்கின்றார்.

இவ்வாறு தேவாரப் பண்களோடு தொடர்புடைய நாட்டாரிசையினை ஆய்வு செய்த சுவாமிகள் தேவாரங்கள் பற்றியும் நுணுக்கமாக நோக்கியுள்ளார். இன்று ஆய்வாளரிடையே கருத்து வேறுபாடுடைய ஒரு விடயம் உள்ளது. அது திருஞானசம்பந்தர் பாடிய "தோடுடைய செவியன்" என்னும் பதிகம் பற்றியதாகும். க.இரகுபரன், 'தோடுடைய செவியனுக்கும்' அது 'பாடப்பட்ட சந்தர்ப்பம் எனப் பெரியபுராணமும் பிறரும் கூறும் நிகழ்ச்சிக்கும் வெளிப்படையான இயைபேதும் இருப்பதாகத் தெரியவில்லை' என ஆராய்ந்து கூறுகிறார்.9 அவருக்குப் பக்கவலுவாக இருப்பது சுவாமியினுடைய ஆய்வு நுணுக்கமாகும். சுவாமி தோடுடைய செவியன் பற்றிக் கூறியதைக் கீழே தருகிறோம்.

"உள்ளங்கவர் கள்வன்" என்னும் சொற்றொடரின் பொருளினை ஒருவாறு தெரிந்து கொண்டோம். இச்சொற்றொடர், 'தோடுடைய செவியன்' என்னுந் தேவாரத் திருப்பதிகத்தினுள்

வருகின்றது. இது தந்தையை நோக்கிக்கூறிய மொழி ஆகுமோ எனில், ஆகாது என்பது வெளிப்படை. இச்செய்யுளை வெளியிட்ட பொழுது, திருஞானசம்பந்த சுவாமிகளுடைய கண்முன்னே தோன்றிய காட்சியினை ஓவியன் உள்ளத்து உணர்வதுபோல, அவருடைய திருவாயினின்று எழுந்த மொழிகளைக் கொண்டு நாம் ஒரு வகையாக அறிந்து கொள்ளலாம். முதலேழு செய்யுள்களின் முதலீரடிகள் உள்ளங்கவர் கள்வனது உருவத்தை நமக்குக் காட்டுகின்றன. ......இவனது ஆடலையும் பாடலையும் கண்ட இளமகளிர் நிறையழிந்து, கையிலணிந்த வளையல்கள் சோரத்தெருவீதியில் வந்து நிற்கின்றனர். முன்னொரு காலத்திலே, தாருகா வனத்திலே இப்பெரியோன் இவ்வண்ணமே நடந்து கொண்டான் என்பது நமது நினைவுக்கு வருகிறது. கூட்டமாக வந்து நிற்போருள் ஒருத்தி ('ஏர் பரந்த இனவெள்வளை சோர', 'இறைகலந்த இன வெள்வளை சோர') கையிலணிந்த வெள்ளிய வளையல்கள் கழன்றுவிழத் தனது உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கள்வனது தன்மையை வாய்விட்டுரைக்கிறாள்." சுவாமியினுடைய கருத்துப்படி இப்பதிகப் பாடலுக்கும் கூறப்படும் கதை நிகழ்வுக்கும் தொடர்பில்லை என்பது புலப்படுகின்றது. பின்வரும் ஆய்வாளர்களுக்கும் தம் ஆய்வுகளுக்கும் அரண் செய்யும் வகையில் கருத்துக்களை முன்வைப்பவர்களே ஆய்வு நுணுக்கமுடைய ஆய்வாளர்கள். சுவாமி அப்படிப்பட்ட ஓர் ஆய்வாளராவர்.

ஆய்வின் பயன்பற்றி முன்னர்க் குறிப்பிட்டுள்ளோம். ஆய்வின் பயனை நன்குணர்ந்து ஓர் ஆய்வினைச் செய்து வழங்கும் நுணுக்கம் சுவாமியிடம் காணப்பட்டது. ஆங்கில நாட்டின் கலைச் செல்வத்தை ஆராய்ந்து "ஆங்கில வாணி" என்னும் கட்டுரையினை எழுதி ஆங்கிலேயருடைய வரலாறு, ஆங்கிலப் புலவர்களுடைய அற்புதமான இலக்கியப் படைப்புக்கள் பற்றியெல்லாம் ஆய்வு செய்து எழுதியுள்ளார். இதிலே காணப்படும் ஒரு நுணுக்கம் என்ன வென்றால் ஆங்கில யவன வரலாற்றைக் கூறுமிடத்துத் தமிழ்நாட்டு இந்திய விடயங்களையும் ஒப்பிட்டுக் கூறுவதாகும். எடுத்துக் காட்டாக, மேனாட்டார் அறிவு விசாலிப்பதற்குரிய மற்றொரு நிகழ்ச்சி அராபியா தேசத்திலே நிகழ்ந்தது. "திருநாவுக்கரசு

சுவாமிகள் நமது நாட்டிலிருந்த காலத்திலே அராபிநாட்டு மக்கமா நகரிலே முகம்மது நபி அவதரித்தார்" என்று சுவாமிகள் கூறும் பகுதியினைக் குறிப்பிடலாம். இக்கட்டுரையினை முடிக்கும் போது சுவாமி பின்வரும் குறிப்புக்களைத் தந்துள்ளார்.

"ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டினை ஒருவாறு நிகர்ப்ப, ஆரியமும் தமிழும் வல்ல பண்டிதமணியாருக்கு ஆங்கில மொழிக் கவிநயத்தினை ஒரு சிறிது காட்டல் கருதி எழுந்த பாட்டிடையிட்ட இவ்வுரைத் தொடர் நிலையானது, வடபால் இமயத்துச் சம்பாவதி நகருக்கடுத்த மாயா வதித் தவப் பள்ளியிலே, விஷுவ வைகாசி மாதம் நிறைவேறியது.

கேதாரநாதர் திருவடி வாழ்க.

கட்டுரையின் இறுதியிலே கொடுத்திருக்கும் குறிப்பு ஆய்வின் பயனை நன்கு புலப்படுத்துகின்றது. பண்டைத் தமிழிலக் கிய நிகழ்வொன்றினை முதலிலே குறிப்பிடுகிறார். ஆரியவரசன் பிரகத்தனுக்குத் தமிழின் சிறப்பினை உணர்த்துவதற்காகத் தமிழின் அகத்திணைப் பொருளை அடிப்படையாகக் கொண்டு கபிலர் குறிஞ்சிப் பாட்டு என்னும் பாட்டினை இயற்றித் தந்தார். குறிஞ்சிப் பாட்டு ஆரியபிரகத்தனுக்குப் பயன்பட்டது போல அடிகளாருடைய "ஆங்கில வாணி" பண்டிதமணி கதிரேசன் செட்டியாருக்குப் பயனளிக்குமென எண்ணி எழுதப்பட்டது. "சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை முந்தை வினை முழுவதும் ஓய வுரைப்பன்யான்" என்று மணிவாசகர் சொன்னது போல் பண்டித மணியாரின் மனம் மகிழ அவரைப் போன்றவர்கள் யாவரும் மகிழ அடிகளார் "ஆங்கில வாணி" ஆராய்ச்சியினை வழங்கியுள்ளார்.

**நவீனப் போக்கு**

அடிகளாருடைய நவீன நோக்குக்கு எடுத்துக்காட்டாக அமைவது அவர் அறிவியலைத் தமிழ்மொழி மூலம் மாணவர்க்குக் கற்பிக்க வேண்டிய வழிவகைகளைப் பற்றி எண்ணியதாகும். வட்டுக்கோட்டை செமினரியிலே இருந்தவர்கள் பல அறிவியல் நூல்களைத் தமிழிலே எழுதியமை பற்றிப் புகழ்ந்து சுவாமி கூறியுள்ளார்.10

"சுவாமி, யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையில் அமெரிக்க மிஷனரிமார் வைத்து நடத்திய செமினரியை எடுத்துக்காட்டாகப் பலமுறையும் கூறுவார். அச்செமினரியில் படித்து வேலை செய்த பெரியோர்கள் கணித நூல், வேதிநூல், வானநூல், பூதநூல், மருத்துவ நூல், உடல் நூல் முதலிய மேனாட்டு விஞ்ஞான நூல் களைத் தமிழில் எழுதி வெளியிட்டார்கள். அவ்வேலையை இடையிலே கைவிடாது யாழ்ப்பாணத்தவர் தொடர்ந்து ஆற்றி யிருந்தால் தமிழ்மொழி மிக விரைவாக முன்னேறியிருக்கும்" என்று பேராசிரியர் கணபதிப் பிள்ளை கூறியுள்ளமை சான்றாக அமை கின்றது. பழைமையிலே நன்றாகக் காலூன்றிப் புதுமையினை உள்ளம் மகிழ்ந்து வரவேற்பவராக அமைந்தார். பழைய நூல் களைப் புதுப்பித்தல் தொடர்பாக ("ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கம்", விவேகானந்தன், 1926, ப.146), "நாடகம், இசை, சிற்பநூல், சித்திரநூல், விஞ்ஞான நூல், வைத்தியநூல், சோதிட நூல், கணிதநூல், நாணயநூல், அரசியல் நூல், தேசசரித்திர நூல், சட்ட நூல் என்னும் இத்துறைகளிலுள்ள பழைய நூல்களைப் புதுக்கிப் பதிப்பித்தும் புதிய நூல்களாக்கியும் தருதல் மதுரை யிலும், யாழ்ப்பாணத்திலும் சங்கமிருந்து தமிழாராயும் சான்றோர் கடனாகும். அங்ஙனம் செய்வாராயின் தமிழ்க்கல்வி இன்னும் பல துறைகளிற் சென்று விருத்தியடையும்" என்று கூறிச் செல்கிறார். சுவாமிகளினுடைய நவீன நோக்குக்கு அவர் மேலைத்தேய நாகரிகம் பற்றி மிகுந்த விருப்புடனே ஆராய்ந்தறிந்ததும், அவ்வாறு அறிந்த விடயங்கள் யாவற்றையும் நம்மவரும் அறியும் வண்ணம் எழுதி வைத்ததும் நல்ல எடுத்துக்காட்டாகும். நவீனக் கலை களெல்லாம் மேற்கே மெத்த வளருகின்றவாம் என அறிந்து அவற்றைத் தமிழ்நாட்டிற்கும் கொண்டுவர முயன்றவர் சுவாமியவர்கள்.

பல்கலைக்கழகம் இந்தியாவுக்குப் புதியதல்ல. நாலந்தா வில் அமைந்த பல்கலைக்கழகம் பற்றி வரலாறு கூறும், எனினும் மேலைத்தேய நவீனப் பல்கலைக்கழக அமைப்பு முறைவந்தபோது சுவாமி அதனை வரவேற்றார். ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் நமது சாதியாருடைய வாழ்க்கை முன்னேற்றத்துக்கு இன்றியமையாத சாதனங்களுள் ஒன்று. ஆதலின் தமிழ்ப் பெருமக்கள் இவ்விஷயத்

தின்மேல் ஊக்கம் செலுத்தி ஆவன செய்வார்களாக"11 என்று குறிப்பிடுகிறார். இதில் "நமது சாதியாருடைய வாழ்க்கை முன்னேற்றத்துக்கு" என்பது நாம் கவனிக்க வேண்டியதொன்றாகும். அடிகளார் முன்னேற்றமான பல விடயங்களிலே தம் கருத்தினைச் செலுத்தியுள்ளார். சுவாமி விபுலானந்தரின் நவீன சிந்தனைக்கு இன்னொரு எடுத்துக்காட்டு மகாகவி சுப்பிரமணிய பாரதியாரைத் தம்முடைய மாணவர்க்கும் பிறர்க்கும் அறிமுகஞ் செய்து வைத்தவர் சுவாமி விபுலானந்தரேயாவார்."12

**முடிவுரை**

இறைவன் எங்களுக்குத் தக்க இணையில்லா அருளறிஞர் சுவாமி விபுலாநந்தர். அவர் இளம் வயதிலேயே எம்மை விட்டுச் சென்றது எங்கள் தவக்குறைவேயாகும். நாமெல்லாம் பல்கலைக் கழகப் பதவிகளுக்குத் தேடிச்செல்ல, சுவாமிகளிடமோ பல்கலைக் கழகப் பதவிகள் தேடி வந்தன. அப்பல்கலைக் கழகங்கள் சுவாமியை வருந்தி அழைத்துத் தமிழ்த் தவிசிலே அமர்த்திய நிகழ்வு ஈழத்துத் தமிழ் மக்களுக்கு, குறிப்பாக மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பு மக்களுக்கு மிகுந்த பெருமையினை அளிப்பதாகும். சுவாமியினுடைய யாழ்நூல் ஆய்வு பற்றி மறு நோக்குகள் தற்போது எழுகின்றன. அமைதியாகவும் உன்னிப்பாகவும் அவற்றைநோக்கி அவற்றின் வலிவு மெலிவுகளைத் தமிழுலகத்துக்கு வழங்கவேண்டிய ஒரு பெரிய கடமை அறிஞர்க்குண்டு.

**அடிக்குறிப்புகள்**

1. செ.அழகரெத்தினம், சுவாமி விபுலாநந்தரின் கல்விச் சிந்தனைகளும், தொண்டுகளும், தமிழ் மன்றம், வவுனியா தேசியக் கல்விக் கல்லூரி, வவுனியா, இலங்கை, (2001: 135-36).
2. மு.கு.நூ. (2001:135).
3. சுவாமி விபுலாநந்தர், இலக்கியக் கட்டுரைகள், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு, (1973, ப.36).
4. மு.கு.நூ. (1973, பக்.2-5).
5. வ.சிவசுப்பிரமணியம், விபுலாநந்த தரிசனம், மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்த நூற்றாண்டு விழாச்சபை, மட்டக்களப்பு, இலங்கை (1993).

6. இலக்கியக் கட்டுரைகள், (1973, ப.151).
7. வ.சிவசுப்பிரமணியம், விபுலாநந்த தரிசனம், (பக்.118-119).
8. சுவாமி விபுலாநந்தர், யாழ்நூல், கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு, தஞ்சை, 1947.
9. இரகுபரன், க.சம்பந்தர் தேவாரம் - ஓர் இலக்கிய விமர்சன நோக்கு, முதுதத்துவமாணி ஆய்வேடு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், 2005.
10. க.கணபதிப்பிள்ளை, "யாழோசை", ஈழத்து வாழ்வும் வளமும், கொழும்பு, 1962.
11. சுவாமி விபுலாந்தர், "தமிழ்ப் பல்கலைக்கழகம்", விபுலாந்தனர் உள்ளம், தொகுப்பாசிரியர், ச.அம்பிகைபாகன், விபுலாநந்த அச்சம் புத்தகசாலை, யாழ்ப்பாணம், (1976, ப.25).
12. Swamy Vipulananda, "The Development of Tamil Religious Thought", Annamalai University Journal, Vol.1:2,1932,P.214.

# உரிப்பொருள் அடிப்படையில் திருக்குறள் காமத்துப்பாலும், சங்க இலக்கியமும்

க.இரா.இராஜேஸ்வரி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி.

**முன்னுரை**

சங்கப்பாக்கள் அகம், புறம் என்ற இருபெரும் பாகுபாட்டைப் பெற்றவை. அகம், புறம் என்ற பாகுபாட்டினைத் தொல்காப்பியம் நெறிப்படுத்துகிறது. சங்கப் பாடல்கள் கொண்ட அகமரபை ஒட்டியே திருவள்ளுவரும் தம் அகச்செய்திகளை காமத்துப்பாலில் எடுத்து உரைக்கிறார். சங்கப் பாடல்கள் முதல், கரு, உரி என்னும் பொழுது, நிலம், உணர்வுகளின் வழி இயற்றப் பட்டவை. இங்கு உரிப்பொருளே முக்கியத்துவம் பெற்று காணப் படுகிறது. திருக்குறளோ சூழலின் அடிப்படையில் நிகழ்ந்த நிகழ்வுகளைப் பொழுது, நிலம், கருப்பொருட்களின் வழி விளக்க மாக எடுத்துக்கூறாது, மக்களின் உணர்வுச் சூழலுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து அடி வரையறை கருதி சுருக்கமாகக் கூறுகிறது. இவ்உரிப்பொருள் அடிப்படையில் திருக்குறளிலும் சங்க இலக்கியத்திலும் காணப்படும் வேறுபாடுகள் மற்றும் அமைப்பையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**சங்க இலக்கியத் திணைக்கோட்பாடு**

சங்க இலக்கியம் முதல், கரு, உரி எனும் முப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டது. முதலும் கருவும் அவ்வத்திணை களுக்குரிய நிலம், பொழுது, நிலத்திற்குரிய பொருட்கள், மக்கள், வாழ்க்கைக் கூறுகள் போன்றவற்றைத் தர, உரிப்பொருள் திணைகளுக்குரிய உணர்வுச் சூழலைத் தருகின்றன. அவ்வத் திணைக்குரிய முதல் கருவால் உருவாகும் இயற்கைப் பின்ன ணியும் அதனை அடிப்படையாகக் கொண்டு எழும் உணர்வுகளும், இதனை தெளிவாகப் பாடல்களில் விளக்கும் உத்திகளான உள்ளுறை, இறைச்சி போன்றனவும், திணைக் கோட்பாடுகளில் இன்றியமையாதன. திணைப்பகுப்பிற்கு இயற்கை பின்னணியே இன்றியமையாததாகும்.

**திருக்குறளில் திணைக்கோட்பாடு**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான திருக்குறள் காமத்துப்பாலில், தலைவன் தலைவியரின் அன்பு வாழ்வு பற்றி 25 அதிகாரங்கள் காணப்படுகின்றன. ஒன்றே முக்கால் அடிகளில்

கட்டமைப்புப் பெறும் குறள் தனது அடிவரையறை காரணமாக திணைக்கோட்பாட்டில் சிறப்பிடம் பெறும் இயற்கை வருணனைக்கு இடமின்றிப் போகின்றது. உணர்வு நிலையின் ஒரு பொருட் கூறினை மட்டுமே மையப்படுத்தி அதிகாரங்கள் பிரிக்கப்பட்டு குறட்பாக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. முதல், கருவுக்கு இதன் அமைப்புக் காரணமாக இடமின்றிப் போகிறது.

**திருக்குறள் காமத்துப்பாலின் அமைப்பு**

திருக்குறள் காமத்துப்பால் மொத்தம் 25 அதிகாரங்களைக் கொண்டது. களவிற்கு ஏழு, கற்பிற்குப் பதினெட்டுமாக இவை பாகு படுத்தப்பட்டுள்ளன. இவ்வதிகாரங்களில் காணப்படும் செய்தி களின் வழி காட்சி, ஐயம், குறிப்பறிதல், இயற்கைப்புணர்ச்சி, இடந் தலைப்பாடு, புணர்ச்சி மகிழ்தல், பசலை போன்ற நிகழ்வுகளின் உணர்வுகள் இங்கே மையப்படுத்தப்படுகின்றன.

எ.கா :

"அலர் எழ ஆருயிர் நிற்கும் அதனைப்
பலர் அறியார் பாக்கியத் தால்" (1141)

"மலர் அன்ன கண்ணாள் அருமை அறியாது
அலர் எமக்கு ஈந்ததிவ் வூர்" (1142)

இக்குறட்பாக்கள் பலரும் தலைவியின் காதலை அறிந்து தூற்றும் சூழலையும், அதனால் தலைவியின் வருத்தமிகு துன்பச் சூழலும் விளக்கமுறுகிறது.

"அரிதாற்றி அல்லல் நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்" (1160)

தலைவனின் பிரிவை ஆற்றாது வருந்தும் தலைவியின் துன்பச்சூழல் இக்குறட்பாவில் தெளிவாகிறது. இவ்வாறு உணர்வுச் சூழல்கள் இங்கே விளக்கப்படுகின்றன.

**சங்க இலக்கியமும், திருக்குறளும்**

- முதல், கரு, உரி எனும் முப்பொருட்கோட்பாடும் சங்க இலக்கியத்தில் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து காணப்படுகிறது.
- திருக்குறளில் இப்பொருள் பாகுபாடு இல்லை.
- சங்க இலக்கியத்தில் உரிப்பொருளே பாடலின் மையப் பொருள் ஆகும்; முதலும், கருவும் துணை செய்யும்.

- திருக்குறளில் ஒரு சூழலில் நடைபெறும் உணர்வுகளே அதன் மையப்பொருளாக உள்ளது.
- சங்க இலக்கியம் பாடல்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனத் திணை அடிப்படையில் வகுக்கிறது.
- திருக்குறளோ திணை அடிப்படையில் கூறாது நிகழும் நிகழ் வினை களவியல், கற்பியல் என வகைப்படுத்திக் கூறுகிறது.
- சங்க இலக்கியம் இயற்கை வருணனைக்குச் சிறப்பிடம் தருகிறது. உள்ளுறை, இறைச்சி இவை அதற்கு துணை புரிகின்றன.
- திருக்குறளின் அடிவரையறை இயற்கை வருணனைக்கு இடமளிக்கவில்லை.
- தொல்காப்பியம், சங்க இலக்கியம் இரண்டும் பரத்தையர் பிரிவு பேசுகிறது. தலைவியின் ஊடலுக்கு சங்க நூல்கள் பரத்தமையை ஒரு பெருங்காரணமாகப் பின்னிப் பாடுதல் உண்டு. அவ்வகை ஊடல் பிணக்கைத் தீர்க்க மழலையையே கருவியாக காட்டுதலும் உண்டு.
- திருக்குறள் வரைவின் மகளிர் தொடர்பினை மனித ஒழுக்கக்கேடு ஐந்தனுள் ஒன்றாகக் கூறுவதால் காமத்துப் பாலுள் பரத்தையர் பிரிவு இடம்பெறவில்லை.

எ.கா:

"தந்தையர் ஒப்பர் மக்களென் பதனான்
அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலும்"

தொல் – 1091

எனத் தொல்காப்பியம் மக்களை ஊடற்தீர்க்கும் கருவியாக காட்டப்படுகிறது.

ஆனால் வள்ளுவரோ தம் காமத்துப்பாலில் புலவி, புலவி நுணுக்கம், ஊடலுவகை என ஊடலுக்கே மூன்று அதிகாரங்கள் எழுதியிருந்தும், தலைவனை மெய்யான பரத்தையெழுக்கம் உடையவனாகக் காட்டவில்லை. அவன் பரத்தமையைக் கற்பித்துத் தலைவி ஊடுவதாகவே குறட்பாக்களில் தொகுத்துக் கூறுகிறார்.

எ.கா :

"இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர் அளிக்குமாறு" 1321

என்ற குறளால் பரத்தை பற்றிய செய்தி ஊடலுக்குக் கற்பித்துக் கொண்ட ஒரு வாய்ப்பான காரணம் என்பது வெளிப்படை. எனவே, ஊடல் தீர்க்கும் கருவியாகிய மழலைகளும் காட்டப்படவில்லை.

இக்கருத்தினை "பொருட்பாலில் வரைவின் மகளிர் என்ற இனமும் பரத்தமையும் கூடா என்று கடிந்த வள்ளுவர் அதனை நினைவிற்கொண்டு காமத்துப்பாலைத் திருத்தி அமைத்திருப்பது அவர்க்கேயுரிய தனித்தன்மையும் சிறப்பும் ஆகும். ஆதலின் திருக்குறள் சங்க இலக்கிய வழியே வள்ளுவரால் செப்பனிடப்பட்டது என்பதும் போதரும்" என்று வ.சுப.மாணிக்கம் தெளிவாக விளக்குகிறார். இதன் வழி திருவள்ளுவர் காமத்துப் பாலில் பரத்தமையைக் கூறாதது தெளிவாகிறது.

**திருக்குறளில் உரிப்பொருள்**

திணைக்கோட்பாட்டில் உரிப்பொருள் என்பது அவ்வத் திணைகளுக்குரிய அக உணர்வு நிலைகளை விளக்குவதாக உள்ளது. இவ்வகவுணர்வுகள் குறிப்பிட்ட அகநிகழ்ச்சிகளால் உருவாகின்றன. இவ்வக உணர்வுகள் முதல், கரு, உரி என்னும் முப்பொருட்களால் கட்டமைக்கப்பட்டு உள்ளன. திருக்குறள் காமத்துப்பாலில் திருவள்ளுவர் இம்முப்பொருள் மரபை அடிவரையறை காரணமாக பின்பற்றவில்லை. ஆயினும் உரிப்பொருளை தம் குறட்பாக்களில் வைத்து இயற்றியுள்ளார் எனலாம். இதன்படி புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்ற ஐந்து உரிப்பொருளையும் திரு வள்ளுவர் தம் குறட்பாக்களில் உணர்வுகளாக முதல் கருப்பொருட் களின் துணையின்றி எடுத்துரைக்கிறார்.

எ.கா: **"பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை**
**தன் நோய்க்குத் தானே மருந்து"** (1102)

நோய்களுக்கு மருந்து வேறு பொருள்களாக இருக்கின்றன. ஆனால் அணிகலன் அணிந்த இவளால் வளர்ந்த நோய்க்கு இவளே மருந்தாக இருக்கின்றாள் என்ற இக்கருத்தின் வழி புணர்தலாகிய குறிஞ்சித்திணையின் உரிப்பொருளும்

**"இன்னாது இனன் இல் ஊர் வாழ்தல் அதனினும்**
**இன்னாது இனியார்ப் பிரிவு"**

உறவானவர் இல்லாத ஊரிலே வாழ்வது கொடுமை. இனிய காதலின் பிரிவு அதை விடத் துன்பமானது எனும் இக்குறட்பாவின் வழி பாலையின் பிரிதலாகிய உரிப்பொருளும்,

"மறப்பின் எவனாவன் மற்கொல் மறப்பறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும்" (1207)

காதலரை மறந்தறியாமல் நினைத்தாலும் உள்ளத்தைப் பிரிவுத்துன்பம் சுடுகின்றதே! நினைக்காமல் மறந்துவிட்டால் என்ன ஆவேனோ? என தலைவியின் இரங்கலையும்

"தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை" 1277

குளிர்ந்த துறையை உடைய காதலன் பிரிந்த பிரிவை நம்மைவிட முன்னம் நம்முடைய வளையல்கள் உணர்ந்து கழன்று விட்டனவே?

"காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும்" (1224)

காதலர் இல்லாத இப்போது, கொலை செய்யும் இடத்தில் பகைவர் வருவது போல் மாலைப்பொழுது வருகின்றது எனப் பொழுது கண்டு இரங்கும் முல்லையின் உரிப்பொருளும்,

"நீரும் நிழலது இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது" (1309)

என நீரும் கூட நிழலை அடுத்திருப்பதே இனிமையானது. அதுபோல் ஊடலும் அன்புள்ளவரிடம் மட்டுமே இனிமை ஆனது என மருதத்திற்குரிய ஊடலைப் பற்றியும் எடுத்துரைக்கிறார். இக்கருத்துக்களின் வழி ஐந்து உரிப்பொருளும் திருக்குறளில் பயின்று வருவதை அறியலாம்.

**முடிவுரை**

இவ்வாய்வு சங்க காலத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்கிய உரிப்பொருள், சங்கம் மருவிய கால இலக்கியமாகிய திருக்குறளிலும் பயின்று வருவதை எடுத்துரைக்கிறது. சங்க இலக்கிய ம் இயற்கை வருணனைக்கு முக்கியத்துவம் கொடுத்து உள்ளுறை, இறைச்சியின் உதவியுடன் உரிப்பொருளை தெளி வாக்கியது. ஆனால் திருக்குறளின் அடிவரையோ இயற்கைக்கு இடமளிக்காத காரணத்தால் அது உணர்வு நிலையில் அடிப்படைக் காதலின் நிகழ்வுகளை குறிப்பறிதல், புலவி, அலர்தூற்றல் எனத் தனித்தனி அதிகாரங்களாக்கி விளக்குகிறது.

# பாடுபொருள் பரவும் வகை

முனைவர் **கதிர்.மகாதேவன்**,
மதுரை.

**சென்ற இதழின் தொடர்ச்சி**

**திணை உணர்த்தும் பாடல்**

ஐவகை நிலத்திற்கும் உரிய பாடுபொருள் உடைய பாடல்களைத் திணைப்பாடல்கள் எனலாம். திணை என்ற சொல்லின் வேர்ச் சொல்லாகிய திண் என்பது திட்டு என்று ஆகி, நிலத்தைக் குறித்து நிற்கிறது. எனவே, திணை என்ற சொல் முதலில் நிலத்தைக் குறித்துப் பின்னர் அந்நிலத்தில் வாழும் மக்களையும், ஒழுக்கத்தையும், அவர்தம் உணர்ச்சிகளையும் விளக்கும் விரிவு பெற்றது. எனவே, திணையால் அல்லது நிலத்தால் சிறப்புப் பெற்ற பாடல்கள் என்று முதலில் திணையைப் பிரிப்பர். அதற்குப் பின் அந்நிலத்து விளைந்த கருப்பொருளால் சிறந்த பாடல்கள் என்று பகுப்பர். இவ்விரு பிரிவுகளிலும் இடம் பெறவில்லை எனின், அந்நிலத்திற்கு உரிய உரிமைப் பொருளால் (உரி) வகைப்படுத்துவர். எனவே, திணைப்பாகுபாடு அவ்வந்நிலத்து இயற்கையாய் எழுந்த பாடல்களைச் சுட்டும் என்பதை அன்றோ சுட்டுகின்றது. ஒரு காலத்து இயற்கையாக எழுந்த பாடல்கள் அந்நாட்டுப் பாடல்கள் என்புதையும், அவை வாய்மொழி இயல்பின் வழி வந்தன என்பதையும், உய்த்துணரலாம். இயல், இசை, கூத்து என்ற மூன்றும் ஒன்றின் ஒன்று உறவு கொண்டு வாழ்ந்த காலம் சங்க காலம். எனவே, சங்க அகத் திணைப் பாடல்களில் நாடக முன்னிலைப் பாங்கு (Dramatic Monologue) காணப்படுகிறது. பெரும்பாலான நாட்டுப் பாடல்களில் உள்ள காதற்பாடல்கள் காதலன், காதலி ஆகியோரின் இயற்பெயர்களைச் சுட்டுவதில்லை. அகத்திணையில் தலைவன் தலைவி முதலியோர்களின் இயற்பெயர் சுட்டப்படுவதில்லை. இம்மரபு வாய்மொழிப் பண்பினைச் சுட்டும் எனலாம்.

**அகவலும் பாடலும்**

“அகவன் மகளே! பாடுக பாட்டே!” எனவும், “பண்டும் பண்டும் பாடுநர் உவப்ப” எனவும், “மறம் பாடிய பாடினி” எனவும், “அகவினம் பாடுதல் தோழி” எனவும், “பாடுகம் வா வாழி தோழி” எனவும் வரும் குறிப்புக்களாலும், சங்கப் புலவர்கள் நாநவில் பாடுபொருள் கவிதைகள் பாடினர் எனலாம்.

வீரநிலைக் காலப் பாடல்கள் அவைக்களச் சூழலிலும், அமர்க்களச் சூழலிலும் பெரிதும் பாடப்பட்டன. ஒரு பாடல் பாடிய சூழலைக் கொண்டு அப்பாடலால் எழுந்த பயனை ஒருவாறு கணிக்க முடியும். சான்றாக, ஔவையார் பாடல் ஒன்றைக் காண்போம்.

“களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போர் எதிர்ந்து
எம்முளும் உளன் ஒரு பொருநன்; வைகல்
எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால் அன்னோனே”

நான்கு வரிகளைக் கொண்ட இப்பாடல் அமர்க்களச் சூழலில் பாடப்பட்டிருக்க வேண்டும். இப்பாடல் எழுதி வைக்கப் பட்டிருந்தால் அன்றைய சூழலில் என்ன பயன் விளைந்திருக்கும்? பகைவர் இப்பாடலை அமர்க்களத்தில் கேட்டிருப்பார்களேயானால், அதனால் ஏற்பட்ட பயன் பெரிது! இப்பாடலில் உள்ள ஆக்க உவமை (Dynamic Simile) பகைவர் உள்ளத்தில் சிந்தனையைக் கிளறி, அச்சத்தைத் தோற்றுவித்தல் கூடும். அதுவே, இப்பாடலின் பயனாக வும் இருக்கும். புறநானூற்றுப் பாடல்கள் தோன்றிய சூழலையும், அப்பாடல்கள் விளைத்திருக்க வேண்டிய பயன்களையும் நோக்கத் தையும் காணின் அப்பாடல்கள் சமுதாயச் சூழலில் பாடப்பட்டிருக்க வேண்டும் என்பதை அறியலாம்.

அகம், புறம் ஆகிய இரண்டு திணைகளைப் பற்றிய பாடல் களை வைத்து ஆராய்ந்தால், இருதிணைகளும் பாடுபொருளால் வேறுபட்டாலும், புறச் செய்திகள் அகப்பாடலில் இடம் பெறுவதைக் காண்கிறோம். அங்ஙனம் அப்பாடலில் காணப்படும் புறச் செய்திகள் பெரிதும் அரசனைப் பற்றி மட்டுமல்லாமல், அவன் களங்கொண்ட நிகழ்ச்சிகளையும் கூறுகின்றன. மேலும், அகப் பாடல்களில் அரசனைக் குறிக்கும் அடைமொழிகளைப் பார்த்தாலே புலவர்களால் வீரநிலைக் காலச் சூழலை மறக்க

முடியவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. மேலும், இவ்வாய்வின் வீரநிலைக் காலப் பண்பாட்டுச் சூழலில் வினை நவில் கவிதைகள் பாடப் பட்டன என்பதனைப் புறப்பாடல்களின் பொருள்திறங் கொண்டு விளக்கப்படுகிறது.

கபிலர், பரணர், ஔவையார் போன்ற 473 புலவர்கள் சங்க காலத்தில் வருகிறார்கள். ஆயிரக்கணக்கான புலவர்கள் இருந் திருக்கக்கூடும். ஆயின், அவர்களைப் பற்றி நாம் அறிய இயல வில்லை. நமக்குக் கிடைக்கும் பாடல்களில் உள்ள புலவர்களை எழுத்து வடிவத்தில் சந்திக்கிறோம். கருத்து வடிவத்தில் அவர் களுடன் அளவளாவ முடியும். அவர்கள் அனைவரும் எந்தப் பண்பாட்டுச் சூழலில் இருந்தார்கள் என்று கண்டால் அவர்கள் பாடலின் கருத்துக்கள் தெளிவாகும்.

சங்கப் பாடல்களின் யாப்பமைப்பு, கருத்தமைப்பிற்கு இன்றியமையாததாகிறது. எந்தப் பண்பாட்டுச் சூழலில் எவ்வெவ் வகையான கருத்துக்களைப் பாடுகிறார்கள் என்று காணின், அப்பாடல்கள் எங்குக் கருவாயின, எங்கு உருவாயின என அறிதல் இயலும்.

**புறத்திணைகளில் பொருள்திறம்**

**(அடிக்கருத்துகள்)**

வினைநவில் கவிதைகள் எந்தத்திணையில் எந்தச் சூழலில் என்ன என்ன பொருள்களில் பாடுகிறார்கள் என்று அறிந்தால் நாநவில் பாடுபொருள் திறம் விளங்கும். சான்றாகப் புறநானூற்றில் வெட்சித் திணையில் - உண்டாட்டு எனும் துறையில் வரும் பாடல் களின் பொருள் திறத்தைக் காண்போம்.

| | | |
|---|---|---|
| திணை | - | வெட்சி |
| துறை | - | உண்டாட்டு |
| பாடல் எண்கள் | - | 257, 258, 262, 269, 297 |

மேற்கூறிய பாடல்களில் மொத்தமாகப் பின்வரும் ஐந்து கள நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. இக்களநிகழ்ச்சிகள் பாடல் பொருள் திறத்தினைக் காட்டுகின்றன. நிரல், நாளைச் சுட்டவில்லை.

1. வேற்றுப் புலம் சென்று ஆநிரை கவர்தல் 2. கள்ளுண்டு களித்தல் 3. பித்தி சூடல் 4. கள்ளினை வாழ்த்தல் 5. கரந்தை நீடிய செரு.

சங்க காலத்து அமர்புரியும் வீரர்கள் மாறினாலும் போர் முறைகள் மாறுவதில்லை. வெட்சிப் போர் புரியும் நோக்கில், இக்கவிதையின் பொருள் நிலை, அக்காலப் போரின் பழக்கத்தைச் சுட்டி நிற்கிறது. இப்பாடலைப் படித்தால், உலோச்சனார், மதுரைப் பேராலவாயார், ஔவையார் (பிற பாடல் பாடியோர் பெயர் தெரிய வில்லை) ஆகியோர் ஒரே காட்சியைக் காட்டவில்லை என்பதை அறியலாம். ஆயின், பாடல்களின் பொருள், நிகழ்ச்சிகளின் திறம் ஆகியவை ஒன்று போல் அமைந்துள்ளன.

அமர்க்களக் காட்சிகள் புலவர் உணர்ச்சிகளுக்கு ஏற்ப நீளும்; குறுகும். ஆனால், நிகழ்ச்சிகள் போர் முறைகள் வீரநிலைக் காலத்தில் மாறுவதில்லை.

இக் களநிகழ்ச்சிகள் இத்துறைப் பாடல்களிலும் பிற பல பாடல்களிலும் துணை நிகழ்ச்சிகளாக வருதல் காணலாம். இத்தகைய நிகழ்ச்சிகள் எங்கெங்கு நடக்கின்றனவோ அங்கங்குப் பாடப் பெறுதல் காணலாம். புலவர்கள் தாங்கள் கண்ட காட்சியை எடுத்த எடுப்பில் பாடிய புலம் புலப்படும்.

**காலமும் பாடுபொருளும்**

காலத்திற்கு ஏற்பப் பாடுகின்ற பொருளும் மாறுகிறது. எந்தப் பொருளைப் பற்றி எக்காலத்தில் - கண்டு - கேட்டு - அனுபவித்துப் பாடினார்களோ அந்தப் பொருள் அக்காலத்தின் உரிமைப் பொருளாகும். சங்க காலத்து நடைபெற்ற புற நிகழ்ச்சி களைக் காட்டும் கண்ணாடியாய்ப் புறநானூற்றைக் கொள்ளலாம்; ஐயாயிரத்து நானூற்று நாற்பத்து நான்கு வரிகளை முந்நூற்றுத் தொண்ணூற்று ஒன்பது (வாழ்த்து நீங்கலாக) பாடல்களில் பாடி யுள்ளனர். அப்பாடல்களில் வரும் நிகழ்ச்சிக் கருத்துக்களின் பொருள் திறத்தைப் பாகுபாடு செய்யலாம். அப்பாகுபாடுகள் ஒன்றின் ஒன்று உறவு உடையவை; வீரநிலைக் கால வாழ்வே, ஒன்றின் ஒன்று உறவு கொண்டது ஆகும். அக்காலத்து வாழ்ந்த மனிதனின் பண்பாட்டினை அப்பொருட் கூறுகளின் நிகழ்ச்சிகள் தெள்ளத் தெளிவாகப் புலப்படுத்தும்.

**புறநானூற்றுப் பொருள் திறம்**

பண்டைத் தமிழர் பண்பாட்டையும் வாழ்க்கை நெறியையும் நிறுவ வேண்டும் எனும் நோக்கத்துடன் இப்பாகுபாடு செய்யப் பட்டுள்ளது. இப்பொருட் பாகுபாடு ஒரு மதிப்பீடே ஆகும். கருத்துப் போக்கில் சில வரிகள் பாகுபாடு மாறுபடலாம். காட்டாக, இகழ்ச்சி என்று கருதும் ஒரு கருத்தைப் பிறிதொரு நோக்கில் புகழ்ச்சியாகத் தோற்றுவிக்கலாம். எனவே, கருத்தும் பொருளும் கவிதையில் வரும் போது மொத்தமாகக் காணவேண்டிய சூழல் நேரும். எந்த நோக்கில் கண்டாலும் பழந்தமிழர் வாழ்க்கை, பெருமிதத்தை நோக்கி நடை போட்டது என்பதை யாரும் மறுக்க இயலாது. வீரம், படை, அமர் ஆகியவை பெருமிதத்திற்கு அடிப்படை ஆயின. கொடை, ஈகை, புகழ் என்பன முன்கூறிய முச்செயல்களுக்குப் பயனாய்ப் பழந்தமிழர்க்குக் கிடைத்தவை.

வாழ்நாள் சிறிது; பெருமிதம் வளர் புகழ் பெரிது என்ற உண்மையைப் பழந்தமிழர் உலகிற்குப் பறைசாற்றினர்.

# தேவார இலக்கியத்தின் தோற்றமும் சமூகப் பின்புலமும்

**முனைவர் உ.கருப்பத்தேவன்,**
உதவிப் பேராசிரியர்,
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற் புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625 021.

**முன்னுரை :**

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலம் தொடங்கி இன்றுவரை இறைவனைப் போற்றியும், புகழ்ந்தும் வணங்கியும், வேண்டியும் பாடிய பாடல்கள் எழுந்த வண்ணம் உள்ளன. இறையன்பினால் உந்தப்பட்டு இறையருளை வேண்டிப் பாடிய பாடல்கள் என்னும் நோக்கில் பார்த்தால் இவை எல்லா வற்றையும் பக்திப் பாடல்கள் என்று கூறலாம். இலக்கியச் சுவை தோன்றப் பாடப்பெற்ற பாடல்களைப் பக்தி இலக்கியம் என்றும் கூறலாம். எனினும் பல்லவர் காலத்தே நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடிய பாடல்களுக்கும், அவர்களுக்கு முன்னும் பின்னும் பாடப்பெற்ற பாடல்களுக்கும் சில அடிப்படை வேறுபாடுகள் உள்ளன.

கடவுளைப் பற்றிப் பாடிய பிறபாடல்கள் எல்லாம் தனிமனித விழைவுந்தல்களால் (individual drives) இயற்றப் பெற்றவை; நோக்கத்தாலோ, யாப்பமைதியாலோ, பாடல் முறைமை யாலோ அவை தம்முள் ஒன்றுபட்டனவல்ல; பல புரவலர்க்காகப் பாடப் பெற்றவை. அரசியல் நோக்கமோ, சமுதாய நோக்கமோ, இலக்கிய மறுமலர்ச்சி நோக்கமோ இந்தப் பாடல்களில் அடிப்படைப் படைப்பு நோக்கமாகக் காணப்பெறவில்லை. ஏதேனும் ஓரிரு புலவர்களின் பாடல்களில் இத்தகைய நோக்கங் கள் ஒன்றிரண்டு காணப்படினும் அவை ஓர் அமைப்பு நோக்கிய அல்லது சீர்திருத்தம் நோக்கிய இயக்கத்தின் அடிப்படையில் எழுந்தனவல்ல; எனவே நாடு தழுவிய உணர்வை அல்லது நோக்கத்தை அவை புலப்படுத்துவனவும் அல்ல.

தமிழில் கி.பி. 250 முதல் 600 வரை களப்பிரர் என்னும் வேற்று மன்னராட்சி நிலவியது. அற இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றின. அவ்விலக்கியப் படைப்புக்களில் சமணசமயத் தாக்கம்

மிகுந்திருந்தன. களப்பிரர் ஆட்சிக்காலத்தில் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு ஆகியன செல்வாக்கு இழந்தன.

சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்கால் இல்லற நிலையைவிட, துறவறநிலைக்கு மிகுந்த சிறப்புக் கொடுத்தப் பேசப்பெற்றது. தமிழக வரலாற்றில் 'சங்கம் மருவிய காலம்' எனக் குறிக்கப்பெறும் இக்காலத்தில் சேர, சோழ, பாண்டியர் எனச் சுட்டப்பெறும் மூவேந்தராட்சி வீழ்ந்து களப்பிரர் ஆட்சி தனிச் செல்வாக்குடன் நிலவியது. களப்பிரர்களில் ஒரு பிரிவினர் பௌத்த சமயத்தவர்; மற்றொரு பிரிவினர் சமண சமயத்தவர். கூற்றுவ நாயனார் போன்ற சைவ சமயத்தவர் சிலரும் இருந்தனர்.

களப்பிரர்கள் தமிழர்களின் பண்பாடு, நாகரிகம், சமயம், மொழி, இலக்கியம், வாழ்க்கைமுறை, வழிபாடு ஆகியனவற்றை ஏற்காததோடு தமது செல்வாக்கை நிலைநாட்டவும், பண் பாட்டையும் வாழ்க்கை முறையையும் வலுப்படுத்தவும் முயன்றனர். களப்பிரர்கள் வடமொழிப் பற்றாளர்கள்; அவர்களின் பேச்சு மொழி யான வடமொழியின் செல்வாக்கும் தமிழகத்தில் மிகுந்தது.

சோழ நாட்டில் தங்கி வாழ்ந்த களப்பிரர் பௌத்த சமயக் கொள்கையைப் பின்பற்றியவர்கள். ஆயினும் இவர்கள் அரசியல் செல்வாக்கு இல்லாதவர்கள். தமிழிலக்கிய வரலாற்றில் 'இருண்ட காலம்' என்றழைக்கப்படும் கி.பி.மூன்று - ஆறாம் நூற்றாண்டு களையடுத்து முதல் முதலில் கடுங்கோன் என்ற பாண்டிய மன்னன் படையெடுப்பாலும், பல்லவர்களின் தாக்குதலாலும் களப்பிரர் ஆட்சி அடிச்சுவடு தெரியாமல் அழிந்தது.

தெற்கே நின்றசீர் நெடுமாறன் என்ற பாண்டிய மன்னன் களப்பிரர்களை வென்று ஆட்சியைக் கைப்பற்றியதோடு, பாண்டிய ராட்சியை மீண்டும் வலுப்படுத்தினான். வடக்கே பல்லவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். பல்லவர்கள் தொண்டை மண்டலம் உள்ளிட்ட பல பகுதிகளைக் கைப் பற்றியதோடு, கல்வியிற் கரையிலா காஞ்சி மாநகரைத் தலைநகராகக் கொண்டு பெருஞ் செல்வாக் கோடு ஆட்சி புரிந்தனர். இவர்களது ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் பௌத்த சமயம் செல்வாக்கை இழந்து அழியத் தொடங்கியது. ஆயினும் கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரையில் சமண சமயம் செல்வாக் கோடு திகழ்ந்தது.

**மதம் மாறிய அரசர்கள்**

முதலாம் மகேந்திரவர்ம பல்லவனும், பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறன் என்ற கூன்பாண்டியனும் சமண சமயத்தைத் தழுவியிருந்து பின்னர் சைவத்திற்கு மாறியவர்கள் என்பது தமிழக வரலாறும் தமிழிலக்கிய வரலாறும் தரும் செய்தியாகும். முதலாம் மகேந்திரவர்மன் மத்தவிலாசப் பிரகசனம், பகவத் அஜ்ஜுகியம் என்னும் இரண்டு வடமொழி நாடகங்களை இயற்றியுள்ளான். மத்தவிலாசப் பிரகசனம் என்னும் நாடகத்தில் சமணர்கள், பௌத்த சமயவாதிகளை எள்ளிநகையாடும் பல காட்சிகள் இடம் பெற்றுள்ளன. பல்லவர்கள் வடமொழியை ஆதரித்தவர்கள். அவர்கள் காலத்தியக் கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் வடவெழுத் துக்கள் விரவி எழுதப்பட்டிருப்பதைப் பரவலாகக் காண முடிகின்றது. பின்னாட் களில் வடமொழியும் தமிழும் கலந்த மணிப்பிரவாளநடை தோன்று வதற்கும் பல்லவர் காலத்தியக் கல்வெட்டுக்களே வழிவகுத்துக் கொடுத்தன.

**சைவ, வைணவ எழுச்சி**

களப்பிரர் ஆட்சி அடிச்சுவடு தெரியாமல் பாண்டியர் மற்றும் பல்லவர் தாக்குதலால் அழிவுற்ற சமயத்தில் பௌத்த, சமண சமயங்களின் மீதும் அம்மதங்களின் கொள்கைகள் மீதும் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது. அக்காலத்தின் சமூகப் பின்னணி, அரசியல் நிலைப்பாடு, வழிபாட்டு முறையின்கண் ஏற்பட்ட மாற்றமும் தேக்கமும் காரணமாகக் கி.பி. ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் சைவ சமய நாயன்மார்களும் வைணவ சமய ஆழ்வார்களும் அச்சமயங் களின் எழுச்சிக்கு வித்திட்டனர். 'முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்பட்டான்' சமண சமயத்தி லிருந்தும் சைவ சமயத்திற்கு மாறிய திருநாவுக்கரசர் அரசாணையை எதிர்த்து 'நாமார்க்கும் குடியல்லோம்' எனப்பாடி, தன்னைச் சிவனின் அடியவர் என்றார். 'நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர் முறைவழிப் படூஉம்' என்ற சங்கப்பாடல் சுட்டும் (சமண சமயவழிப்பட்ட) வாழ்வியல் சிந்தனை மாறி, மனித சமூக வாழ்க்கையின் ஏற்றத்தை யும் இறக்கத்தையும் சிவனருளோடு இணைத்துப் பார்க்கும் சிந்தனை தோன்றியது. இல்லறத்தில் செம்மையான இன்பமுடன்

வாழ்ந்து கொண்டு, இறைவனை வழிபட்டு வீடுபேற்றை அடையலாம் என்ற நிலையைச் சைவம் வளர்த்தது.

சிவனுடைய ஆலயங்களில் உழவாரப் பணிகளைச் செய்வதை யும், ஆடியும் பாடியும் அகங்கரைந்து உருகிநின்ற சித்தத்தைச் சிவன்பால் வைப்பதையும் வாழ்வியல் நெறி முறைகளாகக் கண்டனர் நாயன்மார்கள். சமணமும் பௌத்தமும் புலனடக்கத்தையும், இன்பங்களைத் துறப்பதையும் வலியுறுத்திய நிலைக்கு மாற்றாக (துறவறநிலை), இறைவனைப் பற்றிய சிந்தனையோடு இல்லற வாழ்க்கையை அதன் இனிமையான இயல்புகளோடு நுகர்ந்து இன்புறுவதைப் பல்லவர் காலத்தில் வீறுகொண்டெழுந்த பக்தியியக்கத்தின் மறுமலர்ச்சிக்காலம் கற்றுக்கொடுத்தது. 'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்' என்றும், நடராசப் பெருமானின் ஆடலையும் அழகையும் காண்பதற்கு 'மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்றும் நாயன்மார்கள் பாடும் சமூகச் சூழ்நிலை தோன்றியது.

**ஆலயங்கள் சமுதாய மையங்கள்**

மக்களின் இயல்பான வாழ்வியல் உணர்ச்சிகளை நியாயப் படுத்தி, அவற்றோடு இரண்டறக் கலந்து சைவ, வைணவ நெறிகள் நின்றன. இசைப்பாடலும் ஆடலுமாகிய கலைகள் வாயிலாக பக்திச் சிந்தனைகள் மக்களிடம் பரப்பப்பட்டன. கோயில்கள், மக்களின் சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கும் மையங்களாக விளங்கின. ஆலயங்கள் பலவகையான கலைகளின் வளர்ச்சிக்குரிய மையங் களாக விளங்கின. இத்தகைய காரணங்களால் தமிழகத்தில் ஒரு சமய எழுச்சியையும் விழிப்புணர்ச்சியையும் தோற்றுவிக்க முடிந்தது.

சங்க இலக்கியங்கள் மன்னரையும் மக்களையும் பாடியதைப் போல, பக்தி இலக்கியங்கள் இறைவனையும், இறை யடியார் களையும் இணைத்துப்பாடின. நாயன்மார்களின் பாடு பொருள் இந்த அடிப்படையில் அமைந்தனவே. திருக்கோயி லில்லாத ஊரும், இறையடியார்களால் பக்தியோடு பாடப்பெறாத ஊரும் ஊர்கள் அல்ல; அவை இடுகாட்டிற்கு நிகரானவை என்று திருநாவுக்கரசர் பாடிய தேவாரப் பாடல் வலியுறுத்துவது குறிப்பிடத் தக்கதாகும்.

தேவாரம், திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களில் சமண, பௌத்த சமயங்களைத் தாக்கிப்பாடிய நிகழ்வுகள் காணப்படு கின்றன. சைவம், வைணவம் ஆகிய இவ்விரு சமயங்களும்கூட தங்களுக்குள் தத்தம் கடவுளர்களே மேலானவர் என்ற வகையில் மோதிக்கொண்ட பாசுரங்கள் காணப்படுகின்றன. இதன் எதிரொலி சிற்றிலக்கிய காலத்தில் முக்கூடற்பள்ளு என்ற நூலில் மூத்தபள்ளி இளையபள்ளி ஆகியோர்க்கிடையே நடைபெறும் சைவ வைணவ சொற்போராகின்றது.

**தமிழ் பக்தி மொழி**

தனிநாயக அடிகளார் தமிழைப் 'பக்திமொழி' எனப் போற்றுகின்றார். 'ஆங்கிலம் வணிகத்தின் மொழியென்றும், இலத்தீன் சட்டத்தின் மொழியென்றும், கிரேக்கம் இசையின் மொழியென்றும், செருமன் தத்துவத்தின் மொழியென்றும், பிரெஞ்சு தூதின் மொழியென்றும், இத்தாலியன் காதலின் மொழி யென்றும் கூறுவது ஒரு புடை ஒக்குமெனின் தமிழைப் பக்தியின் (இரக்கத்தின்) மொழியெனல் பொருந்தும்"

(தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, 2007, ப.288) என்பது தனிநாயக அடிகளாரின் கூற்றாகும்.

**பக்தி இலக்கியக் காலம்**

புறச் சமயத்தினரான களப்பிரர்கள், தமிழ்நாட்டில் தொன்மைச் சமயங்களான சைவ, வைணவத்திற்கு ஆதரவு தரவில்லை. ஹரப்பா, மொகஞ்சதாரோ அகழ்வாராய்ச்சியில் சிவவழிபாடும் லிங்க வழிபாடும் அங்கு வாழ்ந்த மக்களுக்கு இருந்திருக்க வேண்டும் என்ற உண்மையைத் தெளிவாக சர். ஜான் மார்ஷல் (Sir John Marshall) என்பவர் எழுதியுள்ளார்.

இருக்கு வேத காலத்திற்கு முற்பட்ட சமயம் சைவ சமயம் ஆகும் என இ.எஸ். வரதராஜ அய்யர், (E.S. Varadharaja Aiyyar) தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி. 1 முதல் 1100 வரை, ப.114) குறிப்பிட்டுள்ளார். அவ்வாறே திருமாலைப் பற்றியக் குறிப்புக்கள் தொல் காப்பியத்தில் 'மாயோன்' என்றும் 'பூவை நிலை' என்றும் குறிக்கப் பெற்றுள்ளன. பாணினி சூத்திர பாடியத்தில் பதஞ்சலியார் வாசுதேவனை பரதெய்வமாகக் குறிப்பிட்டுள்ளார். ஆதலால்

வாசுதேவ வணக்கம் பாணினி காலத்திலேயே இருந்தது என்பதை அறிய முடிகிறது. இத்தகைய தொல்பெரும் சமயமான சைவமும் வைணவமும் மூவேந்தர் ஆட்சியின் வீழ்ச்சியாலும் களப்பிரார் களின் ஆட்சியாலும் அரசாங்கத்தின் ஆதரவற்ற காரணத்தினால் போற்றுவாரற்றுப் போயின. இக்களப்பிரர்கள் சமண பௌத்த சமயங்களுக்கு அரசின் ஆதரவைக் கொடுத்தனர். ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் இவர்கள் அரசியல் செல்வாக்கை இழந்தனர். அப்பொழுது எழுச்சிபெற்ற பாண்டியர்கள் மற்றும் பல்லவர்களின் அரசு ஆதரவினால் மீண்டும் சைவ, வைணவ சமயங்கள் புத்துயிர் பெற்றன. இக்காலத்தே சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சைவப் பெரியார் நால்வரும் பன்னிரு ஆழ்வார்களும் தோன்றிப் பக்திப் பாசுரங்களைப் பாடி மக்களிடையே பரப்பினர். தமிழோடு இசைப்பாடல் மறந்தறியாத சமயக் குரவர் தோன்றாவிட்டால் சைவம் தாழ்ச்சியுற்றிருக்கும் பக்திப் பாடல்கள் சங்க காலத்தில் பரிபாடலில் தொடங்கியது. 'திருமால்', 'செவ்வேள்' பற்றிய பக்திப்பாடல்கள் பரிபாடலில் காணப் படுகின்றன. சிலப்பதி காரத்தின் வேட்டுவவரி, ஆய்ச்சியர்குரவை, குன்றக் குரவைப் பாடல்கள் பக்தி இலக்கியத்தின் விதைகளாயின.

பக்தி இலக்கியம் செழித்து வளர்ந்தகாலம் கி.பி. ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகள் ஆகும். பின்னரும் கி.பி. பதினொன் றாம் நூற்றாண்டையொட்டிப் பட்டித்தொட்டிகளும், கி.பி. பதின் மூன்றாம் நூற்றாண்டையொட்டி அருணகிரிநாதர், கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் தாயுமானவரும், பத்தொன்பதாம் நூற் றாண்டில் வடலூர் இராமலிங்க அடிகளாரும், இருபதாம் நூற்றாண்டில் மகாகவி பாரதியாரின் கண்ணன் பாட்டும் பக்தி இலக்கிய உணர்வை வளர்த்தன. பத்தாம் நூற்றாண்டிற்குப் பின்னர் ஏனைய இலக்கிய வகைமைகளோடு பக்திப் பாடல்களும் வளர்ந்தன. எவ்வாறாயினும் நாம் பக்தி இலக்கிய காலம் எனச் சிறப்பாகப் போற்றுவது கி.பி. ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டு களாகிய பல்லவர் காலத்தையே; ஏனெனில் இக்கால கட்டங்களில் பக்தி இலக்கியப் பாசுரங்கள் மட்டுமே மேலோங்கிச் சிறப்புடன் வளர்ந்தன.

**தொகுப்பும் பகுப்பும்**

தமிழ்நாட்டில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தொடங்கி வைத்த பக்தி இயக்கம், இந்திய மொழி இலக்கியங்கள் அனைத்திலும் பக்தி இயக்கம் வளர்வதற்கு அடிப்படையாக அமைந்தது. நாயன்மார்களாகிய மூவர் முதலிகளும் மாணிக்க வாசகரைச் சேர்த்து நால்வரும் சைவ சமய வளர்ச்சியின் ஆணிவேர்களாக அமைந்தனர். அந்த அளவிற்கு வைணவத்தின் சிறப்புக்களைப் பன்னிரு ஆழ்வார்களும் தம் பாசுரங்களில் பாடிச் சிறப்பித்துள்ளனர்.

இத்தேவாரப் பாடல்கள் அனைத்தையும் கி.பி., பத்தாம் நூற்றாண்டில் சோழப் பேரரசன் இராசராசனின் முயற்சியால் கண்டறிந்தனர். நம்பியாண்டார் நம்பி இவற்றையெல்லாம் தொகுத்தும் முறைப்படுத்தியும், இத்துடன் காரைக்காலம் மையார், மாணிக்கவாசகர், திருமூலர் போன்றோர் பாடிய பாடல்களைத் தொகுத்து இணைத்தும் பதினோரு திருமுறை களாக வகுத்தமைத்தார். சேக்கிழாரின் பெரியபுராணம் (திருத்தொண்டர் புராணம்), ஆழ்வார் பாசுரங்களுடன் கம்பராமாயணம் இணைக்கப் பட்டதைப் போன்று, சைவ சமய நூல்களுடன் இணைக்கப் பெற்று சைவத் திருமுறைகளைப் பன்னிரண்டு என வழங்கினர். ஆயினும் ‘தேவாரம்’ என்ற பெயர் நம்பியாண்டார் நம்பியால் கொடுக்கப்பட்டதன்று.

பன்னிரு திருமுறைகள் தேவாரப் பாடல்களும், திருவாசகமும் திருக்கோவையாரும் திருமந்திரமும் பெரியபுராணமும் அடங்கிய சைவ சமய நூல்கள் பன்னிரு திருமுறைகளாகப் பகுக்கப்பெற்று வகை தொகைப் படுத்தப்பெற்றுள்ளன.

1. ஒன்று, இரண்டு, மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடியவை.
2. நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகள் திருநாவுக்கரசர் பாடியவை.
3. ஏழாம் திருமுறை சுந்தரர் பாடியவை

(இவை ஏழும் ‘அடங்கன் முறை’ எனக் குறிப்பிடப்படும் தேவாரப் பாடல்கள் ஆகும்)

1. எட்டாம் திருமுறை மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகரும் திருக்கோவையாகும்.
2. ஒன்பதாம் திருமுறை - திருமாளிகைத் தேவர், சேந்தனார், சேதிராயர், கண்டராதித்தர், பூந்துருத்த நம்பி காடவ நம்பி, திருவாலி அமுதனார், புருடோத்தம நம்பி, கருவூர்த்தேவர், வேணாட் டடிகள் ஆகிய ஒன்பதின்மர் பாடிய பக்திப் பாடல்களின் தொகுப்பு.

**பத்தாம் திருமுறை திருமூலரின் திருமந்திரம்**

பதினோராம் திருமுறை திருவாலவாயுடையார், காரைக் காலம்மையார், ஐயடிகள் காடவர் கோன், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீரர், கபிலர், பரணர், கல்லாடர், இளம் பெருமானடிகள், அதிரா அடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி ஆகிய பன்னிருவர் பாடிய பக்திப் பாடல்களின் தொகுப்பு.

**பன்னிரண்டாம் திருமுறை பெரியபுராணம் - சேக்கிழார்**

தமிழும் இசையும் கலந்தனவாகச் .சைவ இலக்கியங்கள் (பாடல்கள்) காணப்படுகின்றன. சம்பந்தர், 'நாளும் இன்னிசை யால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' எனப் போற்றப்பட்டார். 'தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்' என்றார் அப்பர். ஆழ்வார் களின் பாசுரங்களைப் பாராட்டும் சுவாமி தேசிகன்,

"செந்தமிழ் மறைகள்நாம் தெளியவோதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே"

என்றார். வைணவப் பாசுரங்களும் தமிழிசையோடு கலந்தனவே.

நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களின் பக்திப் பாடல் களின் உணர்ச்சிப் பெருக்கிலும் இசையிலும் மக்கள் கட்டுண்டு நின்றனர். பாமர மக்களையும் பாராளும் மன்னனையும் பத்தி, ஓர் இயக்கமாக நின்று ஈர்த்தது. உணர்ச்சிக் கழிப்பின் வெளிப்பாடாக அமைந்த இப் பக்திப் பாடல்களில் வடமொழிச் சொற்களும் கலந்திருக் கின்றன. மொழியின் கட்டமைப்பில் ஒரு நெகிழ்ச்சிப் போக்கும் காணப்படு கின்றது. இதற்குக் காரணம் பாடியோரின் மையநோக்கு பக்தி யுணர்வை ஊட்டலேயாகும்.

'தேவாரம்' சொல்லும் பொருளும் 'வாரம்' என்பது 'இசைப்பாட்டு'என்பதைச் சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையால் அறிகின்றோம்.

"சீரியர் பொலிய நீரல நீங்க
வாரம் இரண்டும் வரிசையின் பாட"

(சிலப். புகார்க், அரங்கேற்று, 135 136)

'தே+ வாரம்' எனப் பிரித்துத் தெய்வத்தின் மீது பாடப் பெறும் 'இசைப்பாட்டு' எனப்பொருள் கொள்ளலாம். சங்கப் பாடல்களிலேயே வழிபாட்டு முறைகளையும் சமய உணர்வு களையும் குறிப்புக்களாகக் காணமுடிகின்றது. அவை அப்போதே சமய நிறுவனங்கள் ஆகி, வாதத்திலும் இறங்கியுள்ளன. அவற்றின் முதிர்ச்சியையும் சமயக் காழ்ப்புணர்ச்சியையும் பக்தி இலக்கியக் காலப்பகுதியில் காணநேர்கின்றது.

'தே + ஆரம்' எனப் பிரித்து தெய்வத்தின்மீது (சிவன்மீது) பாடப்பெறும் 'பாமாலை' எனவும் 'பூமாலை' எனவும் பொருள் கொள்ளலாம்.

இந்த அடிப்படையில் மூவர் முதலிகள் பாடிய பக்திப் பதிகங்களுக்கு 'தேவாரம்' எனப் பெயரிட்டிருப்பது பொருத்த மாகவே தோன்றுகின்றது.

'தேவாரம்' என்பதில் 'தே' என்பது தெய்வத்தைச் (சிவனைக்) குறிக்கும். 'தேவாரம்' என்னும் தொடர் 'தேம்பாவணி' என்பதி லிருந்து பெறப்பட்டிருக்கலாம் என்பார். க.வெள்ளைவாரணர் (பன்னிரு திருமுறை வரலாறு, பகுதி ஒன்று, பக். 32 33) தேம் பாவணி என்பது இறைவனை முன்னிலைப்படுத்திப் போற்று வதாகும். சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவருடைய இசைப் பாக்களும் ஏழு திருமுறைகளாகும். இவை 'தேவாரம்' என்னும் பொதுப் பெயரால் குறிக்கப்படுகின்றன. இவ்வேழு திருமுறைகளுக்கும் தேவாரம் என்னும் பொதுப்பெயரை முதன்முதலில் பயன்படுத்தியவர் உமாபதி சிவம் ஆவார்.

"ஞான சம்பந்தர் திருநாவ்ரையர் வன்தொண்டர்
பானிகரும் தேவாரப் பாமாலை"

(உமாபதி சிவம், சிவநாம க்ஷேத்திரக் கலிவெண்பா)

திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி, அதற்குப் பொதுச் சொல் எதையும் பயன்படுத்தாது வியப்பளிக்கின்றது. கி.பி. 11, 12ஆம் நூற்றாண்டுகளில் 'தேவாரம்' என்னும் சொல்லாட்சி

'வழிபாடு' என்னும் பொருளில் வழங்கப்பட்டு வந்ததற்கு இந் நூற்றாண்டுகளில் அரசாண்ட சோழமன்னர்களின் கல்வெட்டுக்களில் 'தேவாரம்' என்ற சொல் பொறிக்கப்பட்டிருப்பது தக்க சான்றாகும்.

**தேவார நாயகம்:**

முதல் இராசேந்திர சோழனது கல்வெட்டுக்களில் 'தேவார நாயகம்' என்னும் பணியாளன் குறிக்கப்பட்டிருக்கின்றான். "அன்றுமுதல் இராசேந்திர சோழனது ஆட்சிக்காலத்தில் கி.பி. 1017ஆம் ஆண்டில் (கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயிலில் உள்ள கல்வெட்டு) நாங்கூருடையான் பதஞ்சலி பிடாரன் என்பவன் தேவார நாயகம் செய்பவனாயிருந்தான் என்று கும்பகோணம் தாவிகா மானம்பாடியிலுள்ள கல்வெட்டொன்று" என்று கூறுகின்றது. இங்குக் குறிக்கப்பெறும் தேவார நாயகம் என்போன், சிவன் கோயில்களின் தேவாரத் திருப்பதிகம் பாடுவோரைக் கண்காணிப்பவன் அன்று. இதனைப் பற்றி ஆராய்ந்த தி.வை. சதாசிவப் பண்டாரத்தார்.

"தேவார நாயகம் என்பவன் வேறோர் அலுவல் புரிந்து வந்த அதிகாரியாயிருத்தல் வேண்டும் என்பது திண்ணம். அரசன் நாள் தோறும் தன் அரண்மனையில் நிகழ்த்தி வந்த வழிபடு பூசையில் அதற்குரிய பணிகளைச் செய்து வந்த பணி மக்களைக் கண்காணிக்கும் அலுவல் பார்த்து வந்த அதிகாரியே தேவார நாயகம் என்று வழங்கப்பெற்றனர் என்பது நுணுகியாராயுமிடத்து நன்கு புலனாகிறது" (தி.வை. சதாசிவபண்டா ரத்தார், இலக்கியமும் கல்வெட்டுக்களும், ப.58) எனக் குறிப்பிட்டிருப்பதிலிருந்து அறிய முடிகின்றது. எவ்வாறாயினும் அக்காலத்தில் 'தேவாரம்' என்ற சொல் வழக்குப் பெற்றிருந்தது என்பதை அறிய முடிகின்றது. கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரட்டைப் புலவர்கள் அவர்கள் பாடிய ஏகாம்பர நாதருலாவில்,

"மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரஞ் செய்த திருப்பாட்டும்"

எனக் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் தம் உலாவில் மல்லிநாத சம்புவராயனைப் பாராட்டியிருத்தலால், அவ்வேந்தன் காலத்தில் இவ்விரட்டைப் புலவர்கள் வாழ்ந்திருக்க வேண்டும். மல்லிநாத சம்புவராயன் என்பவன் தொண்டை மண்டலத்தில் படைவீட்டு இராச்சியத்தில் கி.பி. 1321 1339களில் அரசாண்ட வென்றுமண்

கொண்ட சம்புவராயனுடைய புதல்வன் ஆவான். இராச நாராயண மல்லி நாத சம்புவராயன் என்ற பெயரில் கி.பி. 1336 1373களில் அங்கு ஆட்சி புரிந்தவன் ஆவான்.

இவர்களைத் தொடர்ந்து சைவ எல்லப்பநாவலரும் (கி.பி. 17ஆம் நூற்றாண்டு) தம் திருவருணைக் கலம்பகத்தில் 'வாய்மை, வைத்த சீர்த்திரு தேவாரமும்' என்று குறிப்பிட்டுள்ளார். ஆதலால் கி.பி. பதினான்காம் நூற்றாண்டிலிருந்து 'தேவாரம்' என்னும் சொல் மூவர் முதலிகள் பாடிய பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளுக்கு ஏற்பட்டது என அறிய முடிகின்றது.

**தேவாரப் பாடல்களின் தனிச் சிறப்புக் கூறுகள்**

தேவாரப் பாடல்கள் இசைக்கருவிகளின் உதவியோடு பாடப் பட்டன. சிவன், இசையே உயிராவான்; அவனே அனைத்துக் கலை களுக்கும் உயிராக அமைந்தவன், ஆதலால், சிவனைப் பாடுவதே ஒருவகை வழிபாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ("அர்ச்சனை பாட்டேயாகும்" பெரியபுராணம், 5.70)

சிவன் இசையாகவும், இசையின் பயனாகவும் இருப்பவன். இதனைச் சுந்தரர் தேவாரத்தால் அறியமுடிகின்றது.

"ஏழிசையாய், இசைப்பயனாய்" சுந்தரர் தேவாரம், 7.51:10

கலைகளுக்கெல்லாம் பொருளாக அமைந்தவன் சிவன். திருஞானசம்பந்தர் இசையால் இறைவனை வழிபட்டதாகச் சுந்தரர் (7.628) குறிப்பிடுகின்றார். 'தமிழோ டிசைப்பாடல் மறந்தறியேன்' (4:1:6) எனக்கூறும் அப்பர், அடியார்கள் பாடும் இசைப்பாடலில் இறைவன் மகிழ்வதாகக் கூறுகின்றார். இசை, சிவ வழிபாட்டின் ஓர் அங்க மாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அக் காலத்தில் சமணர் கலை நிகழ்ச்சிகளை, ஆன்மீக நெறிக்கு எதிரியாகக் கருதினர். ஆனால் தேவாரப் பாடல்கள் இசை யோடு கூடிய கலை நிகழ்ச்சி களை இறைவழிபாடாகவே போற்றுகின்றன.

தேவாரப் பாடல்கள் கலப்பற்ற பக்தியையும் ஒழுக்கத்தை யுமே ஆன்மீக நெறியின் அடிப்படையாகக் கூறுகிறது. இறைவனை உயிர் கரைந்து, ஊன் உருகி வழிபட வேண்டும்.

**அடுத்த இதழில் தொடரும்**

## செந்தமிழ்க் கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | தலைவர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | செயலாளர் |
| திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. ச.தசரதராமன் B.A.,B.L., | உறுப்பினர் |
| திரு. து.மாயராசன் B.Sc., B.L., | உறுப்பினர் |
| திரு. இரா.ஜெகனாதன் B.E., | உறுப்பினர் |
| திரு. லெ.சிவக்குமார் B.E., | உறுப்பினர் |
| திரு. ஜெ.பாலதண்டாயுதம் B.Sc., | உறுப்பினர் |
| திரு. கி.ராஜாராம் B.A., | உறுப்பினர் |
| முனைவர் அ.செல்வமணி | பல்கலைக்கழக நியமன உறுப்பினர் |
| முனைவர் சு.விஜயன் | உறுப்பினர் |
| முனைவர் கி.வேணுகா | உறுப்பினர் |

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

## ஆசிரியர் குழு

முனைவர் திரு. தமிழண்ணல்

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. அ.அ. மணவாளன்

முனைவர் திரு. கதிர்மகாதேவன்

முனைவர் திரு. முருகரத்தனம்

முனைவர் திரு. பெ. சுயம்பு

முனைவர் திரு. இ. மறைமலை

RNI Regd. No.5508/57 December 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month

# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்



(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் 8+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி: 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

### சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

முனைவர் சு.விஜயன்
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை - 625 001

From
SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, INDIA

பெறுநர்/To,

வெளியிடுபவர்: ச.மாரியப்பமுரளி M.A.,B.L.,செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1 ✆ 0452 - 2343455
அச்சகம்: ஜெயஸ்ரீ கிராபிக்ஸ், காமராஜர்சாலை, மதுரை-9.